ௐ

# விவாஹ சோபனம்



தொகுப்பு

பிரம்ம ஸ்ரீ ப. சிவானந்தசர்மா (கோப்பாய்-சிவம்)

இசைக் கலைமணி ஸ்ரீமதி சி. தாக்ஷாயணி B.A., Dip. in Edu.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்

## முக்கிய அறிவித்தல்

### <u>உடனுதவும் பகுதி</u>

நீங்கள் எடுத்து வாசிக்கும் புத்தகத்தில் கீறுதல், கிறுக்குதல், அழித்தல், வெட்டுதல் மற்றும் ஊறுபாடுகளைச் செய்யவேண்டாமெனக் கேட்டுக் கொள்கிறோம். புத்தகங்களை எடுக்கும்பொழுது இப்படியான குறைபாடுகளைக் கண்டால் நூலகப் பொறுப்பாளருக்கு உடன் தெரிவிக்கவும். இல்லாவிடின் இவ்வூறுபாடுகள் தங்களாலேயே செய்யப்பட்டதென்று கருதப்படுவதுடன் நூலகத்தில் விதிக்கப்படும் தண்டனையையும் ஏற்கநேரிடும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

நூலகம்
மன்றம்
யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ௐ

# விவாஹ சோபனம்

(வைதிக விவாஹக் கிரியை விளக்கங்களும்
கல்யாணப் பாடல்களும்)


தொகுப்பு
பிரம்மஸ்ரீ ப. சிவானந்த சர்மா (கோப்பாய் - சிவம்)
இசைக்கலைமணி ஸ்ரீமதி சி, தாக்ஷாயணி
B.A., Dip in Ed



123898


**அமரர் ஸ்ரீமதி தாக்ஷாயணி சிவானந்தசர்மா**
**அவர்களின்**
**ஞாபகார்த்த வெளியீடு**


வெளியீடு;
2-6-1998
(கிருகயக்ஞ தினம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிந்தனைக்கு

''..................எவ்வளவுதான் அலசி அலசி விரிவாக எழுதினாலும் நூறாயிரம் சமாசாரங்கள் வந்து சேர்கிற மநுஷ்ய வாழக்கையில் ஒவ்வொரு அம்சமும் இப்படித்தான் என்று எழுதிவைத்து நிர்ணயம் பண்ண முடியாது. எழுத்திலே நிர்த்தாரணம் பண்ணுவது சட்டம் மாதிரி நிர்ப்பந்தமாகத் தான் தோன்றும். நன்றாகக் கட்டுப்பாடு செய்கிற சட்ட விதிகள் வேண்டும் தான். நம் சாஸ்திரங்களில் இப்படி நிறைய இருக்கத்தான் செய்கின்றன. ஆனால் கட்டுப்பாடு பண்ணுவதற்கும் ஒரு கட்டுப்பாடு வேண்டும்.''

காஞ்சி காமகோடி பீடாதீஸ்வரர், ஸ்ரீ

சந்திர சேகரேந்திர சரஸ்வதி சங்கராசார்ய

சுவாமிகள் (தெய்வத்தின் குரல்)

''நான் இந்த சாஸ்திரத்தில் எல்லா தர்மங்களையும் சொல்லி விடவில்லை. மீதி எவ்வளவோ இருக்கின்றன. ஸ்திரீகளிடமிருந்தும் நாலாம் வருணத்தவர்களிடமிருந்துங்கூடக் கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டியவை அநேகம் இருக்கின்றன. அவர்களைக் கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள்''

ஆபஸ்தம்ப மகரிஷி. (ஆபஸ்தம்ப ஸூத்திரம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிவேதனம்

எனது சகதர்மிணி தாட்சாயணி நோயுற்றிருந்த வேளையிலுங் கூட என்னோடு உடனிருந்து இரவு பகலாக உருவாக்கிய இந்நூல், அவள் உயிருடனிருக்கும் போது வெளிவர முடியவில்லை.

இன்று அமரராகிவிட்ட என் இதய தீபத்தின் நினைவாக அவளது ஆத்ம சாந்திக்காக இம்மலரைச் சமர்ப்பிக்கிறேன்.

கோப்பாய் - சிவம்


ஆவரங்கால்,
புத்தூர்,
19-6-98.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இசைக்கலைமணி

ஸ்ரீமதி தாக்ஷாயணி சிவானந்தசர்மா

B.A., Dip.In.Ed.



மலர்வு

4-10-1956

உதிர்வு

21-05-1998

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

விவாகசோபனம் என்ற இந்நூல் இரண்டு முக்கிய நோக்கங்களுடன் வெளியிடப்படுகிறது. ஒன்று, விவாஹக் கிரியைகள் பற்றிய விளக்கங்களைத் தருவது. மற்றொன்று விவாஹ வைபவத்தின் அங்கமாக அமையும் ஊஞ்சல் முதலிய சடங்குகளின் போது பயன்படுத்தப்படும் பாடல்களை முன்வைப்பது.

விவாஹம் என்பது சமஸ்காரங்களுள் ஒன்று. சம்ஸ்காரம் என்பது வாழக்கையில் நாம் கைக்கொள்ள வேண்டிய கிரியைகளைச் சுட்டி நிற்பது. ஓர் ஆணும் ஒரு பெண்ணும் இணைந்து கிருஹஸ்த தர்மத்தில் பிரவேசிக்கும் போது மேற்கொள்ளும் ஆரம்பக்கிரியையாக அமைவதே விவாஹ சம்ஸ்காரமாகும்.

விவாஹ சம்ஸ்காரம் இருபெரும் கூறுகளைக் கொண்டிருக்கிறது. வேதமந்திரங்களையும், வேதகாலம் தொட்டு வழங்கி வரும் நம்பிக்கைகளையும் அடிப்படையாகக் கொண்ட பாரம்பரியக் கிரியைகள் முதலாவது. வரலாற்றுப் போக்கில் காலந் தோறும் புகுந்து வளர்ச்சி பெற்ற சடங்காசாரங்கள் மற்றொரு கூறு.

இவ்விரு கூறுகளும் இணைந்து இனிய கொண்டாட்டமாக நிகழும் விவாஹம் ஆழமான தத்துவார்த்தங்கள் கொண்டது. இத்தத்துவார்த்தங்களையும் நோக்கங்களையும் மரபு முறைகளையும் தெளிவுபடுத்த இந்நூல் முயல்கிறது.

மரபுமுறைகளிலீடுபாடு இருந்துங்கூட விபரங்கள் தெரியாமல் மயங்கி நிற்போருக்கு இது ஒரு கைந்நூலாக அமையும் என்பது எமது நம்பிக்கை. இந்நூலின் முதற் பகுதியில் வைதிக பாரம்பரியம் சார்ந்த விவாஹ அடிப்படைகளும் ஒழுங்கு முறைகளும் தத்துவங்களும் சில முக்கிய மந்திரங்களின் பொருள்களும் தெளிவுபடுத்தப்படுகின்றன.

மற்றொரு பகுதியில் கல்யாணப்பாடல்கள் இடம் பெறுகின்றன. கல்யாணத்தின் போது ஊஞ்சல், நலுங்கு முதலிய நிகழ்ச்சிகளில் பாடப்படும் பாடல்கள் சம்பிரதாய பூர்வமாகத் தொடர்ந்து வருபவை. சங்கீத மும்மூர்த்திகளுள் ஒருவராகிய ஸ்ரீ தியாகராஜ சுவாமிகளால் ஆக்கப்பட்ட தெலுங்கு உருப்படிகள் அவை. ராமபிரானின் கல்யாணக் காட்சியை அவர் மனக்கண்ணில் தரிசித்துப்பாடினார். அந்த ஆனந்த அனுபவப்பாடல்களை நம்முன்னோர், கல்யாண கோலத்திலுள்ள

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணமக்களை லக்ஷ்மீ நாராயணராகவும் சீதாராமராகவும் கண்டு வாழ்த்துவதற்குப் பயன்படுத்தி வந்தனர்.

அவற்றைப் பின்பற்றித் தமிழ் நாட்டில் சில பெரியோர்கள் தமிழிலும் சில உருப்படிகளைப் பாரம்பரியமான சுத்த கர்நாடக சங்கீத அடிப்படையில், மங்கலகரமான ராகங்களில், சந்தர்ப்பத்திற்கேற்ற மெட்டுக்களில் இயற்றியுள்ளனர்.

தென்னிந்தியக் கிராமங்கள் சிலவற்றில் கிராமிய ரீதியான பாடல் களும் பயன்படுத்தப்படுகின்றன. இவை நகைச்சுவை, கிண்டல், விளையாட்டு என்ற முறையிலும் எளிமையான பேச்சோசைப் பண்பைப் பயன்படுத்தியும் உருவாக்கப்பட்டுள்ளன. இவை தொகுக் கப்பட்டு நூல்களாகவும் வந்துள்ளன.

'நஜன்' எழுதிய ''கல்யாணமே வைபோகமே'' நூலிலும் சரஸ்வதி பட்டாபிராமன் தொகுத்த 'கௌரி கல்யாண வைபோகமே' நூலிலும் இத்தகைய பாடல்களைக் காணலாம்.

இத்தகைய பாரம்பரியப் பாடல்கள் மட்டுமல்லாமல் இவற்றைப் பின்பற்றிப் புதிய பாடல்களும் சில இடங்களில் பாடப்படுகின்றன. பழைமையில் வேரூன்றிக் கிளைவிட்டுப் படரும் புத்திலக்கியப் படைப்புக்களாய் நாம் இவற்றையும் வரவேற்பது பொருத்தமே.

கல்யாணப்பாடல்களைத் தெரிந்து மரபு முறைப்படி பாடக்கூடியோர் மிகச் சிலரே. சில இடங்களில் மரபு முறை தெரியாது பாடுகிறார்கள். சில இடங்களில் பாடல் பாடாமலே நாதஸ்வர இசையோடு ஊஞ்சல் முதலியவற்றை நடத்திவிடுகிறார்கள். இந்நிலை மாறிப் பலரும் இத்தகைய பாடல்களை அறிந்திருக்க வேண்டும் என்ற நோக்கில் இந்நூலில் கல்யாணப்பாடல்கள் வெளியிடப்படுகின்றன.

சத்குரு ஸ்ரீதியாகராஜ சுவாமிகளின் உற்சவ சம்பிரதாயக் கீர்த்தனைகளில் சில முக்கிய பாடல்களையும், மரபு ரீதியான சில தமிழ்ப் பாடல்களையும் தொகுத்திருப்பதோடு சில புதிய பாடல்களையும் இணைத்திருக்கிறோம். இப்புதிய பாடல்களுள் சில, இயலிசை வாரிதி என். வீரமணி ஐயர் இயற்றியவை. வேறு சில, எம்மால் இயற்றப் பெற்றவை.

இந்நூல் முழுமைபெற்ற ஒரு விவரண நூலாகவோ ஆய்வு நூலாகவோ ஆக்கப்படவில்லை. பிராமணோத்தமர்களுக்கு ஒரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைந்நூலாக உதவுவதற்காகவே உருவாக்கப்பட்டுள்ளது.

அன்பர்கள் இந்நூலை மனமுவந்தேற்று எம்மை ஆசீர்வதிக்க வேண்டுகிறோம். மேலும், இதில் காணப்படும் குறைபாடுகளைச் சுட்டிக்காட்டினால் அடுத்த பதிப்பில் அவற்றை நிவிர்த்தி செய்ய முடியும். அத்துடன் பின்னர் உருவாக்கப்பட வேண்டிய விரிவான ஆய்வு நூலுக்கும் அது துணை செய்யும்.

இந்நூலாக்கத்திற்கு வேண்டிய ஆலோசனைகளை வழங்கியும் கட்டுரையைப் பார்வையிட்டு வேண்டிய திருத்தங்களைச் செய்து, மெருகேற்றியும் வைத்தவர்கள் 'நியந்த்ரீ'யின் தலைவரும் யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறைத் தலைவரும் ஆகிய, பேராசிரியர் பிரம்மஸ்ரீ ப.கோபாலகிருஷ்ணன் மற்றும் 'நியந்த்ரீ' உபதலைவரும் யாழ். பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியரும் ஆகிய பிரம்மஸ்ரீ நா.சுப்பிரமணிய ஐயர் ஆகியோர். அவர்களுக்குப் பணிவான எமது வணக்கங்களை நன்றியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

நேர்முக உரையாடலில் பல தகவல்களைத் தந்தும், நூல்களை வழங்கியும் எமது ஐயங்களைப் போக்கி ஆர்வமூட்டிய சான்றோர்களை நன்றியோடு வணங்கி நிற்கிறோம்.

புதிதாக நம்மால் இயற்றப் பெற்ற பாடல்களைப் பார்வையிட்டுச் சாற்றுகவி வழங்கி ஆசீர்வதித்து உற்சாகமூட்டியவர் இயலிசை வாரிதி என். வீரமணி ஐயர் அவர்கள். தாம் இயற்றிய பாடல்கள் சிலவற்றையும் அவர் தந்து இந்நூலுக்குப் பெருமை சேர்த்திருக்கிறார். அவருக்கு எமது பணிவன்பான வணக்கங்களும் நன்றிகளும் உரித்தாகட்டும்.

இந்நூலை வாங்கி வாசித்து தமது அபிப்பிராயங்களையும் தெரிவிப்பதோடு நல்ல முறையில் பயன்படுத்தவும் வேண்டுமெனக் கேட்டுக் கொண்டு பிராமணோத்தமர்களிடம் இதனைச் சமர்ப்பிக்கிறோம்.

*தொகுப்பாசிரியர்கள்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயல் 1

## *வைதிக விவாஹம் - சில சிந்தனைகள்*

**சநாதனதர்மம்.**

இவ்வுலகில் பிறந்த ஒவ்வொருவரும் தத்தமக்குரிய கடமைகளைச் சரியாகச் செய்து, பிறருக்கும் இயன்றவரை உதவி, இறைசிந்தனையோடு தர்மத்தின் வழி நின்று ஒழுக்க வாழ்வு வாழ்ந்து ஆன்ம ஈடேற்றம் பெற வேண்டும் என்பது சநாதனதர்மமாகிய இந்து நெறியின் நோக்கமாகும்.

இந்நெறி முறையில் பிறருக்கு வழிகாட்டியாக வாழ வேண்டிய உயர் நிலையில் பிறக்கின்ற பிராமணருக்குக் கடமைகளும் பொறுப்புக்களும் அதிகம். பிறக்கும் போதே கடனோடு பிறப்பவர்கள் பிராமணர்கள்.

''ஜாயமானோ வை ப்ராம்மண: த்ரிபிர் ரிணவாந் ஜாயதே,

ப்ரஹ்ம சர்யேண ரிஷிப்யோ யக்ஞேந தேவேப்ய: ப்ரஜயா பித்ருப்ய:''

(பிறக்கும் போதே பிராமணன் மூன்று கடன்களுடன் பிறக்கின்றான். ரிஷிகளுக்குரிய கடன் பிரம்மசர்யம் அநுஷ்டித்து வேதாத்யயநம் செய்வதாலும், இரண்டாவதாகிய தேவர்களின் கடன் யாகங்களாலும் மூன்றாவதாகிய பிதிர்க்கடன் பிரஜைகளைப் பெறுவதாலும் தீர்க்கப்படுகின்றன.)

இவ்வாறு ரிணத்ரயம் என்ற மூன்று கடன்களில் மூன்றாவது கடனின் முக்கியத்துவம் பற்றித் **தைத்திரீய உபநிஷத்,**

''ப்ரஜா தந்தும் மா வ்யவச் சேத்ஸி:,
தர்மாந் ந ப்ரமதிதவ்யம்:'' என்று கூறுகிறது. அதாவது, ''சந்ததியாகிய நூலை அறுத்து விடாமலிரு, தர்மத்திலிருந்து மறந்தும் நழுவுதல் கூடாது.'' என்பதே இதன் பொருள்.

தர்மம், அர்த்தம், காம்யம், மோக்ஷம் என்ற நாற் பொருள்களைப் புருஷார்த்தமாகக் கொண்டு வாழும் வாழ்க்கையில் தர்மமே முதலாவதாயும் அனைத்திற்கும் அஃடிப்படையாகவும் அமைகிறது. அதனால் தான் வாழ்க்கைப் படிநிலைகளை பிரமசர்யதர்மம், கிருஹஸ்ததர்மம்,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வானப்ப்ரஸ்த தர்மம், சந்நியாச தர்மம் என நான்கு தர்மங்களாக வகுத்துத் தருகிறது தர்மசாஸ்திரம். தர்மம் என்பது அறம், இல்லறம், துறவறம் என்றே தமிழிலும் வாழ்க்கை முறைகள் வழங்கப்படுகின்றன.

''சதுர்ணாம் ஆஸ்ரமாணாம் து க்ருஹஸ்தோ யோநிருச்யதே, தஸ்மாத் சர்வ ப்ரயத்நேந ரக்ஷணீயோ க்ருஹாஸ்ரமம்''

''நான்கு ஆசிரமங்களுக்கும் கிருஹஸ்தம் உற்பத்தித் தானம் என்பதால் அதை எவ்வகையிலும் காப்பாற்ற வேண்டும்.'' எனவும்,

''யதா நதீ நதாஸ் ஸர்வே ஸாகரே யாந்தி ஸம்ஸ்திதம்,

ததைவாஸ்ர மினஸ் ஸர்வே க்ருஹஸ்தே யாந்தி ஸம்ஸ்திதம்.''

''நதிகள் யாவும் கடல்நோக்கிச் செல்வது போல ஆசிரமங்கள் யாவும் க்ருஹஸ்தாஸ்ரமத்தையே நாடி நிற்கின்றன''. எனவும் கூறப்படுகிறது.

எனவே, அந்தணராகப் பிறந்தோர் இல்லற தர்மத்தை முறைப்படி நடத்துவது உலகம் முழுமைக்கும் சிறப்புத் தருவதாகும். சநாதனதர்மமாகிய நமது வைதிக தர்ம நெறியிலே ஆன்மா பூவுலகில் கருவாக வைக்கப்படுவதில் ஆரம்பித்து, இவ்வுலகை நீங்கிச் சென்ற பின்னரும் கூட ஆன்ம விமோசனத்துக்காகச் செய்ய வேண்டிய சம்ஸ்காரங்கள் பல சொல்லப்பட்டுள்ளன.

**சம்ஸ்காரங்கள்**

வேதகர்மாக்கள் சூத்திரங்களிலே வகுத்துரைக்கப்பட்ட போது சிரௌதம், கிருஹ்யம் என வேறுபடுத்தப்பட்டன. சிரௌத சூத்திரங்கள் வேத வேள்விகள் பற்றிக் கூறுகின்றன. கிருஹ்ய சூத்திரங்கள் இல்லறக் கிரியைகள் பற்றிக் கூறுகின்றன. இவையே சம்ஸ்காரங்கள் எனப்படும்.

தர்ம சாஸ்திரங்கள் எனப்படும் ஸ்மிருதி நூல்கள் மக்களின் வாழ்க்கை ஒழுக்கங்களை நெறிப்படுத்தி நிற்கின்றன. இந்நூலிலும் சம்ஸ்காரங்கள் வலியுறுத்தப்படுகின்றன.

இந்த சம்ஸ்காரங்கள் 'வைத்ய நாத தீக்ஷிதீயம்' எனக் கூறப்படும் ''ஸ்ம்ருதி முக்தா பல நிபந்தனக் க்ரந்தம்'' என்ற நூலில் தான் முறையாக விரித்துத் தெளிவுபடுத்தி வழங்கப்பட்டுள்ளன. சுமார் இருநூறு வருடங்களுக்கு முன் தோன்றிய இந்த நூலின் அடிப்படையிலேயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று நமது சம்ஸ்காரங்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

சம்ஸ்காரங்கள் என்ற சொல் 'க்ரு' என்ற வினையடி 'சம்' என்ற உபசர்க்கத்தோடிணைந்து உருவானது. நன்றாக ஆக்குவது என்பது இதன் பொருள். ஆன்மாவை நல்ல நிலைக்கு உயர்த்துவதற்காக ஆர்வத்தோடும் அக்கறையோடும் நன்கு செய்யப்பட வேண்டிய காரியங்களே சம்ஸ்காரங்கள் ஆகும்.

சுருதி எனப்படும் வேதத்தில் கூறப்பட்ட சிரௌத கர்மாக்கள் ஆஹவனீயம், தக்ஷிணாக்னி, கார்ஹபத்யம் என்ற மூன்று அக்னிகளில் செய்யப்பட வேண்டியன. ஸ்மிருதிகளில் விரித்துரைக்கப்பட்ட ஸ்மார்த்த கர்மாக்கள் ஸ்மார்த்தாக்னி அல்லது ஔபாசனாக்னி எனப்படும் ஒரே அக்னியில் செய்யப்பட வேண்டியன. இந்த க்ருஹ்ய கர்மாக்களில் உபயோகமாகும் மந்திரங்களின் தொகுதி 'ஏகாக்னி காண்டம்' எனக் கூறப்படுகிறது.

ஔபாசனர்க்னியைத் தருவது விவாஹ சம்ஸ்காரமே. கர்ப்பாதானம் முதலாகக் கூறப்படும் நாற்பது பிரதான சம்ஸ்காரங்களில் விவாஹம் நடுநாயகமாக விளங்குகிறது.

## விவாஹம்

எல்லாவகைத் தர்மங்களையும் செய்து எல்லோரையும் ஆதரித்து நிற்கும் க்ருஹஸ்தாஸ்ரமத்தின் நுழை வாயிலாக இது அமைகிறது. தாங்குதல் என்ற கருத்தமைந்த 'வஹ்' என்ற வினைச்சொல்லடியாகப் பிறந்த விவாஹம் என்ற சொல் தர்மத்தை நன்கு தாங்கி நிற்பது என்று பொருள்படுகிறது. அதற்கு உறுதுணையாக ஒரு பெண்ணை அடைவதனால் 'சஹதர்மசாரிணீ யோகம்' எனவும் இது பெயர் பெறுகிறது. எல்லா மங்களங்களையும் கொண்டிருப்பதால் கல்யாணம் எனப்படுகிறது. தமிழிலே தெய்வத்தன்மை பொருந்திய என்ற கருத்தமைந்த 'திரு' என்னும் அடைமொழியை வாசனை என்ற கருத்துடைய 'மணம்' என்ற சொல்லோடு சேர்த்துத் திருமணம் என வழங்குவர். மலரின் வாசனை மலருக்கன்றிப் பிறருக்கே பயன்படுதல் போலத் திருமணமும் பிறருக்குதவும் தர்ம வாழ்க்கையே ஆகும்.

அறிவைத் தேடி, அறப்போதனைகளை மனம் கொண்டு, சில இலட்சியங்களை உறுதியாகப் பிடித்துக் கொண்ட மாணவப் பருவத்தின் நிறைவாகவும் அடுத்து வரவிருக்கும் இல்லறப்பருவத்தின் ஆரம்பமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வும் அமைவதே திருமணவிழா. இருமனம் கலக்கும் திருமணம் என்பது ஆண்பெண் இணைவைக் காட்டுவது. அசையாமல் இருக்கும் நிலையான சக்திக்கனல் அசையும் இயக்க சக்தியாக மாறி தர்மஜோதியாகச் சுடர்விடும் ஆரம்பம் இது. உலக இயக்கம் என்ற தர்ம சக்கரத்தின் அச்சாணியாக நின்று இயங்கச் செய்வதே விவாஹம்.

## நோக்கமும் அடிப்படைகளும்

விவாஹத்தில் மூன்று முக்கிய நோக்கங்கள் உள்ளன.

1) நல்ல பிரஜைகளை உற்பத்தியாக்குதல்

2) பெண்களுக்கு ஒரு பற்றுக் கோட்டை ஏற்படுத்தி ஆன்ம ஈடேற்றம் நல்குதல்.

3) இல்லற தர்மத்தில் ஈடுபட்டு ஸ்வதர்மாநுஷ்டானங்களைத் துணையோடிணைந்து நன்கு நிறைவேற்றுதல்.

யௌவனத்தின் யதார்த்தமான சக்திஸ்வரூபத்தின் பிரவாகத்தை நெறிப்படுத்தி எல்லையிட்டு நல்வழியில் மிதமாகப் பாயச் செய்து அதன் பயனை உலகம் யாவும் பெறும் வகையில் இன்ப வாழ்க்கையோடிணைந்த நல்லறமாக இல்லறத்தை உருவாக்குவதே இந்துக்களின் திருமணத் தத்துவமாகும்.

''சிற்றின்பமும் பேரின்பத்துக்கு வழி'' என்கிறார் காம சூத்திரம் நூலாசிரியர் வாத்ஸ்யாயனர். ''அர்த்தமும் காமமும் கூட அறிவுள்ள அரசனாகிய திலீபனுக்குத் தர்மமாகவே இருந்தது'' என்று காளிதாசர் 'ரகுவம்ச'த்தில் கூறுகிறார். (அப்யர்த்த காமௌ தஸ்யாஸ்தாம் தர்ம ஏவ மனீஷிண:)

''மாதா பூர்வரூபம்; பிதா உத்தரரூபம்; ப்ரஜா ஸந்தி;

ப்ரஜநநம் ஸந்தானம்'' என்றும், ''பத்நி உறி ஸர்வஸ்ய மித்ரம்'' என்றும் குறிப்பிடப்படும் வேத வாக்கியங்கள் கவனிக்கத் தக்கவை. ஒருவனது நல்லறச் செயல்கள் யாவற்றுக்கும் மனைவியே காரணமாகிறாள். ''காரியம் யாவிலும் கைகொடுத்து'' என்று இதையே பாரதி குறிப்பிடுகிறார்.

இத்தனை சிறப்பு வாய்ந்த இல்லறத்தை இனிது நடத்துவதற்கான ஆரம்பம் ஏற்றம் மிக்கதாக இருக்க வேண்டும் என்றே திருமணச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சடங்குகள் காலங்காலமாக நடத்தப்படுகின்றன.

''தெய்வீக சக்தியும் பெரியவர்களின் ஆசீர்வாதமும் நல்வாழ்க்கை என்ற நல்ல பயிர் விளைச்சலுக்கு அத்தியாவசியமாகின்றன'' என்கிறார். 'கல்யாணமே வைபோகமே' நூலாசிரியர் நஜன்.

''விவாஹம் என்கிற சம்ஸ்காரம் தம்பதிகளின் வாழ்க்கை முழுவதிற்கும் மங்கலத்தைத் தருவது. அது மந்திரங்களின் சக்தியாலேற்படுவது. அம்மாதிரியான மந்திரங்களைச் சரிவர உச்சரித்து நன்மையைக் காண வேண்டியே மகரிஷிகள் அவற்றை உபதேசித்துள்ளனர். மந்திரங்களின் அர்த்தங்களையும் நன்கு தெரிந்துகொண்டு அவற்றை ஒழுங்காகச் சொல்ல வேண்டும்''. என்கிறார் 'விவாஹ மந்திரார்த்தங்கள்' நூலாசிரியர் ஸ்ரீ கி.பாலசுப்ரமணிய ஐயர்.

கிரியைகளிலீடுபடும் போது அவற்றின் நோக்கம், மரபுவழிப் பெருமை, மந்திரார்த்தங்கள் ஆகியவற்றைத் தெரிந்து கொண்டு செய்வது சிறப்பு. இயல்பாகவே அவற்றுக்குள்ள சக்தியும் நமது நம்பிக்கையும் நற்பலன் தரும் என்பது உண்மையே. எனினும் பொருளுணர்ந்து செய்யும் போர்து பலன் அதிகம் என்பதை சாந்தோக்கிய உபநிடதம் குறிப்பிடுகிறது.

''யதேவ வித்யயா கரோதி சிரத்தயா உபநிஷதா,
தேதேவ வீர்யவத் தரம் பவதி'',

(கருத்துணர்ந்து சிரத்தையுடன் செய்யப்படும் கிரியைகள் மிக வலிமையுடையவையாகின்றன.)

ஒருவன் பிறப்பினால் பிராமணனாகவும் சம்ஸ்காரங்களினால் துவிஜனாகவும் (இருபிறப்பாளன்) அறிவினால் விப்ரனாகவும் ஆகின்றான். இம்மூன்றும் இணையும் போது அவன் சுரோத்திரியன் எனச் சிறப்பிக்கப்படுகிறான் என்று ஒரு சுலோகம் கூறுகிறது.

''ஜன்மனா ப்ராஉற்மணோ ஜ்ஞேய;

ஸம்ஸ்காரை: த்விஜ உச்யதே,

விப்ரத்வம் வித்யயா சாபி

த்ரிபி: ஸ்ரோத்ரிய உச்யதே''.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரலாறு:

ரிக்வேதம் 10 ஆம் மண்டலம் 85 ஆம் சூக்கத்தில் சோமன் கிருஹஸ்தாஸ்ரமம் செய்ய எண்ணி, ஸூர்யையை மணக்க நிச்சயித்து, விவாஹம் செய்வதற்காக வரப்ரேஷணமாக அஸ்விநீ தேவர்களை அனுப்புகிறான். இதுவே இன்றைய நமது விவாஹ சோபனத்தின் தொல் நிலை ஆகும். இதன் படிமுறை வளர்ச்சியே க்ருஹ்ய சூத்திரங்களிலும் தர்ம சாஸ்திரங்களிலும் காணப்படுவன. அவ்வவ்போது தேசாசாரம் காரணமாக சிஷ்டர்களால் மனமுவந்து ஏற்றுக் கொள்ளப்பட்ட சம்பிரதாய பூர்வமான சடங்குகளும் இவற்றோடு இணைந்து கலையழகும் களிப்பும் கொண்டாட்டமும் நிறைந்த கல்யாண நிகழ்வாக விவாஹம் இன்று பரிணமித்துள்ளது. ''பெண்கள் கூறுவனவற்றையும் செய்க'' என்று ஆபஸ்தம்பர் கூறுவது கவனிக்கத்தக்கது. அதாவது வைதிக மந்திரங்களோடு கூடிய கிரியைகள் தவிர்ந்த ஏனைய சம்பிரதாய பூர்வமான சடங்குகள் பெரும்பாலும் பெண்களாலேயே நடத்தப்பெறுவன. இவற்றையும் ஏற்க வேண்டுமென்பது ஆபஸ்தம்பர் கருத்து.

பொதுவாக எல்லா நாடுகளிலும், இனங்களிலும் தொல்பழங்காலத்தில் களவு மணமே இருந்திருக்கிறது. அவ்வகையில் பண்டைத்தமிழரிடையேயும் களவு மணம் இருந்தது. பெற்றோர் உவந்து செய்யும் திருமணச் சடங்குகளும் இருந்திருக்கின்றன. இதனைச் சங்க நூல்கள் மூலம் உணராலம். பின்னர் களவியல் ஏற்பட்ட தவறுகள் காரணமாகக் கிரியை முறைகளைப் பெரியோர் வகுத்தனர். இதனைத் தொல்காப்பியர்,

''பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர்
ஐயர் யாத்தனர் கரணம்'' எனக் குறிப்பிடுவார்.

சங்க காலத்திலேயே வைதிக பௌராணிக மரபுகளைத் தமிழ் மக்கள் கையாளத் தொடங்கி விட்டனர். இவ்வகையில் தமிழரின் திருமண நடைமுறைகள் படிப்படியான மாற்றங்களையும், பிரதேச ரீதியான சில வேறுபாடுகளையும் கொண்டு விளங்கின.

தென்னிந்தியாவிலும், ஈழத்திலும் இன்று வாழும் தமிழ் மக்களுடைய திருமண நடைமுறைகளைப் பொதுவாக இரண்டு பெரும் பிரிவுக்குள் அடக்கலாம்.

1) பிராமணர்களால் கைக்கொள்ளப்படும் வைதிக மரபு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2) ஏனையோரால் கைக்கொள்ளப்படும் ஆகம மரபு.

முன்னதாகக் குறிப்பிடப்படும் வைதிக விவாஹ முறைகளே இந்நூலில் கவனத்துக்கு எடுக்கப்படுகின்றன.

**சிரத்தை:**

விவாஹக் கிரியைகளிலும் மந்திரங்களிலும் சமபிரதாய பூர்வமான சடங்குகளிலும் ஆத்மார்த்தமான பல சிறப்பம்சங்களும் மனோதத்துவ ரீதியான நன்மைகளும் லௌகீகமான சமூகவியல் பயன்பாடுகளும் அடங்கியிருப்பதால் அவற்றை உணர்ந்து பேணிப்பாதுகாத்துச் சிரத்தையுடன் அநுஷ்டிப்பது நமது கடமை.

* * * * *

* * *



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயல் 2

## சில முக்கிய கிரியைகளும் சம்பிரதாயங்களும்

### பூர்வாங்கம்

பிராஹ்மம், தைவம், ஆர்வம், பிராஜாபத்யம், ஆசுரம், கந்தவர்ம், ராஷக்ஷசம், பைசாசம் என்று தர்மசாஸ்திரம் கூறும் எண் வகை மணங்களில் பிராஹ்மம் என அழைக்கப்படும் முதல் வகையானதே நம்மிடையே நடைபெறுவதாகும்.

இது பெற்றோர்களால் நிச்சயிக்கப்பெறுவது. ''ஒரு கணமேனும் ஆசிரமமின்றி இருக்காதே'' என்பதற்கிணங்க, பிரம்மசர்யம் முடிந்து வந்த ஒரு பிராமணன் க்ருஹஸ்தாஸ்ரமத்தை நிகழ்த்த வேண்டித் தகுந்த பெண்ணைத் தேடும்படி பெரியோர்களை வேண்டுவதாக ஒரு மந்திரம் கூறுகிறது.

பெண்ணைத் தேர்ந்தெடுத்தல், பேச்சுவார்த்தைகள் நடத்துதல், ஜாதகப்பொருத்தம் பார்த்தல், நிச்சயதார்த்தம் செய்தல் என்பன இதனடிப்படையிலேயே நிகழ்கின்றன, இவை விவாஹ கர்மாவின் பூர்வாங்கமாக முதலிலேயே நடந்து விடுகின்றன என்பதோடு சட்ட பூர்வமான திருமணப்பதிவுங்கூட முதலிலேயே இன்றைய கால கட்டத்தில் நடந்து விடுவதுண்டு, எனினும் மரபு முறைப்படி 'வரப்ரேஷணம்' என்ற ஒரு நிகழ்ச்சியை மணவறையில் முதலாவது கிரியையாக நிகழ்த்தி அதற்குரிய மந்திரம் கூறுகிறார்கள்.

''மிக வேகமாகச் செல்பவர்களே, நீங்கள் விரைவில் நல்ல வழியால் சென்று பெண்ணை எனக்கு விவாஹம் செய்து தரும்படி பெண்ணின் தந்தையிடம் கேளுங்கள். நீங்கள் செல்லும் வழிகள் கல், முள் என்பன இல்லாமல் ஒழுங்காக இருக்கட்டும். அர்யமா, பகன் என்ற இரு தேவர்களும் கணவன் மனைவியாக எங்களைச் சேர்த்து வைக்கட்டும்.

### நிச்சயதார்த்தம்

இருதரப்பாருக்குமிடையில் ஒரு நிச்சயத்தை ஏற்படுத்தும் அதே நேரத்தில் சமூகத்திற்கு இவ்விவாஹச் செய்தியை அறியத் தருவதற்கும் இக்கிரியை பயன்படுகிறது. யாருக்காவது இத்திருமணத்தில் ஆக்ஷேபமிருப்பின் தெரிவிப்பதற்கு ஒரு சந்தர்ப்பமாகவும் இது அமைகிறது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நிகழ்ச்சியில் விக்நேஸ்வரபூஜை மட்டுமே கிரியை. சந்தனம் முதலியவற்றால் சம்பந்திகள் ஒருவரையொருவர் உபசரித்த பின்பு இருதரப்பினருடைய கோத்திரம், பெயர்கள் என்பன கூறி அடுத்துவரும் முகூர்த்தத்தில் விவாஹத்தை நடத்துவோம் என்று நிச்சயித்துத் தாம்பூலம் மாற்றிக் கொள்வதே முக்கிய அம்சமாகும்.

ஓர் அங்கமாக சம்பந்திகளிருவரும் பரஸ்பரம் மணமக்களுக்கான வஸ்திரங்களை அன்பளிப்பாக வழங்குவதும் இடம் பெறுகிறது. ஒருவகையில் பார்க்கும் போது மணமக்கள் அங்கு பிரசன்னமாயிருக் கவே தேவையில்லை. ஆனால் அடுத்து நிகழவிருக்கும் சட்ட பூர்வமான திருமணப் பதிவின் போது இருவரும் ஒன்றாக இணைவதற்கு முன் இங்கு விக்னேஸ்வரர் முன் ஒன்றாகக் காட்சி தருவது தவறில்லை எனவும் சில பெரியோர்கள் கூறுகின்றனர்.

## பொன்னுருக்கு

மாங்கல்யம் செய்வதற்கு ஒரு முழுப்பவுண் பயன்படுத்தப்படும். ஆசாரசீலரான பொற்கொல்லர் புனிதமாக, சுபநேரத்தில் மங்கல வாத்தியம் முழங்கப் பொன்னை உருக்கி எடுப்பதே இந்நிகழ்வு. இது மணமகன் வீட்டில் திருமணதினத்திற்குச் சுமார் ஒரு வாரத்துக்கு முன் நடைபெறும். பொன்னுருக்கிய பின்னரே உறவினர்களைத் திருமணத் துக்கு அழைக்கச் செல்வது மரபு. இதனால் பொன்னுருக்கி முடிந்ததும் கல்யாணப் பத்திரிகை படித்தல் என்ற நிகழ்ச்சியும் நடைபெறுகிறது.

## கன்னிக்கால் நாட்டுதல்

பொன்னுருக்கு நிகழ்ந்தவுடன் மணமகள் வீட்டில் கல்யாணப் பந்தலுக்குரிய கன்னிக்காலாக நாட்கால் நடுதல் நடைபெறும். அலங்கரித்த முள்முருக்கம் தடியை ஈசான மூலையில் நட்டுச் சுமங்கலிப் பெண்கள் பாலிகையிடுதலும் நடைபெறும். உடனேயே பெண் வீட்டுக்குச் சென்று இங்கும் கன்னிக்கால் நாட்டிய பின்னர் இருதரப்பினருமாக உறவினர் களுக்கு அழைப்பு விடுப்பர்.

## சமாவர்த்தனமும் மாப்பிள்ளை அழைப்பும்

ஜானவாசம் என்னும் மாப்பிள்ளை அழைப்பு இந்தியாவில் சிறப்பாக நிகழும் தனியான ஒரு நிகழ்ச்சியாகும். ஆனால் ஈழத்தைப் பொறுத்தவரை திருமண நாளன்று காலை மணமகன் வீட்டில் சமாவர்த்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம்

தனமும் காசியாத்திரையும் நிகழ்ந்தவுடன் பெண் வீட்டுக்கு அழைத்து வரும் சிறு நிகழ்ச்சியாக நடைபெறுகிறது.

சமாவர்த்தனம் என்று நாம் பொதுவாகக் கூறினாலும் அங்கு பிரமசர்ய ஆசிரமத்தை முடித்துக் கொண்டு வந்ததற்கான கிரியைகளே முதலில் மந்திர சகிதமாக நடைபெறுகின்றன. பிராஜாபத்யம், ஸௌம்யம், ஆக்னேயம், வைஸ்வதேவம் என்பன பிரமசாரிக்குரிய நான்கு வேத விரதங்கள். இவை நான்கிற்குமுரிய விரதோபக்ரமம், விரத உத்ஸர்ஜனம் ஆகியன முதலில் நிகழும்.

ஸங்கல்ப பூர்வமாக வபனம், ஸ்நானம் என்பனவும் செய்துவந்த பின் தந்தையும் மகனுமாக அமர்ந்து சங்கல்பம் செய்து சமிதா தானம், தர்ப்பணம் என்பவற்றை மகனும் ஔபாசனம், ஜயாதி ஹோமம் என்பவற்றைத் தந்தையும் செய்ய வேண்டும். இவை நித்யாக்னி கார்யங்களாகும். இவற்றோடு விரத உத்ஸர்ஜனம் வரை செய்து முடித்த பிறகு சமாவர்த்தனம் நிகழும். சமாவர்த்தனம் என்பது திரும்பி வருதல் எனப்பொருள்படும். பிரமசர்யம் நிறைவு செய்து குருவிடம் இருந்து திரும்பி வருதல் (முன்பு உப நயணம் நிகழ்ந்ததும் குருவிடம் செல்வது முறை. உப நயனம் என்றால் அழைத்துச் செல்லுதல் எனப் பொருள்)

சமாவர்த்தனத்தின் போது அதுவரை பிரமசாரியாக இருந்த முறைக்கு மாறாக இரு பூணூல் தரித்து, பஞ்சகச்சமாக இரு வஸ்திரம் தரித்து சந்தனம், குங்குமம், கண்மை, காதணி, கழுத்தணி என்பன அணிந்து கண்ணாடி பார்த்துக் கொள்ள வேண்டும். இவற்றுக்கெல்லாம் தனித்தனியாக மந்திரங்கள் உண்டு. ஆனால் மந்திரமில்லாமலும் செய்யலாம் என ஆபஸ்தம்பர் கூறியதற்கிணங்க இன்று தூஷ்ணீம் சமாவர்த்தனமே (மந்திரமற்ற) நிகழ்கிறது.

மணமகன் காசியாத்திரை புறப்படுவதும் அப்போது பெண்ணின் தகப்பனார் வந்து, "இன்ன கோத்திரத்தில் பிறந்த இன்னாரின் புதல்வியாகிய இன்ன பெயருள்ள கன்னிகையை விவாஹம் செய்து தருகிறோம்." என்று கூறி வஸ்திரம் முதலியன வழங்குவதும் இன்று சமாவர்த்தனத்தையடுத்துச் சம்பிரதாயமாக நடைபெறுகிறது.

இதன் பிறகு சுமங்கலிப் பெண்களைக் கொண்டு பாலிகை இடுவித்து அங்குரார்ப்பணம் செய்தபின் மணமகனுக்குப் பிரதிஸரபந்தனம் (ரக்ஷாபந்தனம்) செய்யப்படும். இருகைகளிலும் பச்சரிசி ஏந்திக் கொண்டிருக்க அதன் மேல் ஒரு தேங்காய் வைத்துக் கொண்டு மணமகன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கத் தந்தை அவனது வலது கையில் ரக்ஷையைக் கட்டுவார். இதன் பின் ஆசீர்வாதம் செய்து ஆரத்தி காட்டிய பின் மணமகள் வீட்டுக்குப் புறப்படுவர்.

### முக்கியமான ஐந்து கிரியைகள்

''வாக்தானஞ்ச ப்ரதானஞ்ச வரணம் பாணி பீடனம்,
ஸப்தபாதீதி பஞ்சாங்கோ விவாஹ: பரிகீர்த்தித:''

என்ற சுலோகத்தின்படி பெண்ணைத் தருவதாக வாக்குப்பண்ணுதல், கன்னிகாதானம், கன்யாவரணம், பாணிக்கிரகணம், சப்தபதீ என்ற ஐந்தும் விவாஹத்தின் முக்கிய அங்கங்கள். ஆறாவதாக சம்பிரதாய பூர்வமாக நீண்டகாலம் அநுஷ்டிக்கப்படும் மாங்கல்ய தாரணமும் இடம் பெறுகிறது.

இங்கு கூறப்படும் வாக்தானம் என்பது நிச்சயதார்த்தமாக நடை பெற்று விடுகிறது. ஏனையவை விவாஹ நாளில் நடை பெறுகின்றன. அவற்றோடு வேறு பல கிரியைகளும் சடங்குகளும் இடையிடையே இடம் பெறுகின்றன.

### மாலை மாற்றுதல்

மணமகள் இல்லத்துக்கு மணமகன் வந்ததும் மணமகளின் சகோதரன் மணமகனது பாதங்களை நீரால் கழுவுதலும் அதற்குப் பரிசாக மணமகன் மைத்துனருக்கு மோதிரம் அணிவித்தலும் சம்பிரதாயம். இது நிகழ்ந்த வுடன் மணமகள் சர்வாலங்கார பூஷினதையாக கையில் ஒரு மாலையு டன் வருவாள். அவள் தனது கரத்திலுள்ள மாலையை மணமகனது கழுத்திலிட்டதும் அவன் தான் முதலில் அணிந்திருந்த மாலையைத் தோழ னின் உதவியுடன் கழற்றி மணமகளுக்கு இடுவான். மணமகள் வரும் போது கழுத்தில் ஒரு மாலை அணிந்து கொண்டு வருவதும் சில இடங்க ளில் வழக்கம். இது அவசியமில்லையெனினும், அவ்வாறு அணிந்து வருவதாயின் மாமியார் அல்லது தாயார் அவளுக்கு அந்த மாலையை முன்னதாகவே அணிவித்திருப்பர்.

மணமகன் அங்கு வருமுன்னரே மணமகளின் தந்தையார் சங்கல் பபூர்வமாக விக்னேஸ்வர பூஜை புண்யாகவாசனம் அங்குரார்ப்பணம் (சுமங்கலிகள் பாலிகையிடல்) செய்து மணமகளுக்கு ப்ரதிசரபந்தம் (ரக்ஷாபந்தனம்) கட்டி விட்டிருப்பார். அவர் தமது ஔபாசனத்தையும் அங்கு செய்திருத்தல் விரும்பத்தக்கது. கன்னிகாதானம் நிகழும் போதே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்கு அக்னி சாட்சியாயிருப்பதற்கு இது உதவும்.

மாலை மாற்றுதல் மூன்று முறை நிகழும். பொதுவாக, ஒருவர் அணிந்த மாலையை இன்னொருவர் அணிதல் சாஸ்திரத்துக்கு மாறு. ஆனால் மணமக்கள் ஈருடலும் ஓருயிரும் என்பதை உணர்த்துவதற்காக இச்சடங்கு நிகழ்கிறது.

## கன்னியூஞ்சலும் திருஷ்டி சுற்றலும்

வைதிக விவாஹசம்பிரதாயத்தில் சிறிது பிற்பட்ட காலத்தில் சேர்த்துக் கொள்ளப்பட்ட இம்மரபு இன்று மிக முக்கியமானதும் கலகலப்பூட்டு வதும் ஆக அமைகிறது. வாசலில் மாலை மாற்றியதும் மணப்பந்தலின் வாசலருகே அமைக்கப்பட்டிருக்கும் ஊஞ்சலில் மணமக்கள் அமர்த்தப்படு வர்.

ஊஞ்சல் என்பது வானத்துக்கும் பூமிக்கும் உள்ள தொடர்பைக் காட்டுவதாகவும் உலக இயக்கத்தை உணர்த்துவதாகவும் கருதப்படு கிறது. இத்தகைய தத்துவரீதியான குறியீட்டு விளக்கம் ஒருபுறம் இருக்க, புதுமணத் தம்பதியினை ஆனந்த அநுபவத்திலாழ்த்துதல் எனவும் புதியவர்களிருவரும் பரஸ்பரம் ஒருவரோடொருவர் கலந்து பழகுவ தற்கு வாய்ப்பளித்தல் எனவும் லௌகிகமான விளக்கமும் கொடுக் கலாம்.

இங்கு ஒரு முக்கிய விடயம் கவனிக்கப்பட வேண்டும். ஊஞ்சல் கிழக்கு முகமாக அமைந்திருக்கும். மணமகன் வலப்புறமும் மணமகள் இடப்புறமுமாகவே இருத்தப்பட வேண்டும். பொதுவாக வைதிகக் கிரியைகள் யாவற்றுக்கும் பெண் கணவனுக்கு வலப்புறமாக - அதாவது கணவன் கிழக்கு முகமாக வடக்கேயும் மனைவி தெற்கேயும் இருக்க வேண்டும். ஆனால் சில கிரியைகளின்போது மட்டும் பெண் இடது புறம் இருக்க வேண்டும். ஒன்று ஏலவே குறிப்பிடப்பட்ட ஊஞ்சல், மற்றவை ரக்ஷாபந்தனம், யோக்த்ர விமோசனம் (இடுப்பில் சுற்றிய தர்ப்பைக் கயிற்றை அவிழ்த்தல்.) ஆசீர்வாதம், மங்கள ஆரத்தி என்பனவாகும்.

ஊஞ்சலில் மணமக்கள் இருக்கும் போது மங்கலப் பொருட்கள் சிலவற்றினால் சுமங்கலிப் பெண்கள் திருஷ்டி சுற்றிப் போடுவதன் மூலம் தோஷங்கள் நீக்கப்பட்டுக் காவலிடப்படுகிறது.

இந்நிகழ்வின் போது நாதஸ்வர கானத்துடன் சம்பிரதாய பூர்வமான பாடல்கள் பாடப்படுகின்றன. இருவீட்டாரிடமிருந்து தெரிவு செய்யப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்ட ஐந்து அல்லது ஏழு சுமங்கலிகள் வரிசைக்கிரமமாக மங்கலப் பொருட்களைக் கொண்டு வந்து ஊஞ்சலை மூன்று முறை சுற்றிய பின் வரிசையாக முன்னே வைப்பர். ஏழு பெண்களும் எடுத்துவர வேண்டிய பொருட்கள் வரிசைக் கிரமமாக.

1) ஜலபாத்திரம் (கெண்டி)

2) பூர்ணகும்பம்

3) தீபம் (ஒரு சட்டியில் பாதுகாப்பாக வைக்கப்பட்ட அகல்விளக்கு எனின் நன்று.)

4) நிறை நாழி

5) இருதேங்காய், வெற்றிலை, பாக்கு, பழம்.

6) பட்டினால் மூடிய பாற்கிண்ணம்.

7) மஞ்சளும் சுண்ணாம்பும் பூசிய 22 அன்ன உருண்டைகள்

(ஒன்பது பேர் தேவையாயின் இரு தட்டில் அன்ன விளக்குகள் செய்து அவற்றை ஏற்றி இருவர் முதலிலும் இறுதியிலுமாக வரலாம்.)

முதலாவதாக ஜலபாத்திரம் கொண்டு வருபவர் நீரைத் துளிகளாகச் சிந்திவருவது ஸ்தல சுத்திக்காக. பாற்கிண்ணம் மணமகளின் தாயார் எடுத்துவருதலே மரபு.

ஊஞ்சலின் முன்னே பொருட்கள் வைக்கப்பட்டதும் மணமகளின் தாயார் வெற்றிலை, பாக்கு, தேங்காய் ஆகியவற்றை இருவர் தரங்க ளிலும் தனித்தனியே கொடுத்தபின் பாற்கிண்ணத்தை எடுத்துக் கைவிரல் களால் பாலைத்தொட்டு மணமக்களின் பாதங்களைக் கழுவிப் பட்டினால் துடைப்பார். ஏனைய சுமங்கலிப் பெண்களும் இவ்வாறு செய்வர். இருவரதும் மாமிமாரும் இதில் இடம் பெறுதல் முக்கியம். பின்னர் ஐந்து சுமங்கலிப் பெண்கள் நிறைநாழியை ஒவ்வொருவராக எடுத்து மணமக்களது தலையைச் சுற்றி விட்டு வைப்பர். (நிறைநாழியும் அன்ன உருண்டைகளும் மட்டுமே இவ்வாறு திருஷ்டி பரிகாரத்துக்காக இருவர் சிரசையும் சுற்றிப்பயன்படும். ஏனைய பொருட்கள் சுற்ற வேண்டிய தில்லை. நிறைநாழியில் சிலர் சத்தகம் முதலியன வைப்பர். அதுவும் தேவையற்ற ஒன்று.)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறைநாழி சுற்றப்பட்ட பின் ஐந்து சுமங்கலிகள் ஒவ்வொருவராய் வந்து அன்ன உருண்டைத்தட்டினை எடுத்து ஒவ்வொரு உருண்டை களையும் இருவர் சிரசையும் சுற்றி பின் கிழக்கு, தெற்கு, மேற்கு, வடக்கு என நான்கு திசைகளிலும் போடுவர். இவ்விதமாக ஐவரும் 20 உருண்டைகள் போட்ட பின் எஞ்சிய இரு உண்டையைக் கெண்டி நீர் விட்டுப் பிசைந்து கரைத்து அதனை ஆரத்தி எடுப்பர். இந்த ஆரத்தியும் உருண்டைகளும் அப்புறப்படுத்தப்பட்டு வழமையான மஞ்சள் நீர் ஆரத்தியும் எடுக்கப்படும்.

ஊஞ்சல் நிறைவுற்ற பின் மணமகள் வீட்டினுள் செல்ல மணமகன் மனவறைக்குச் செல்வது பழைய மரபு. ஏனெனில் மணமகன் மணவறை சென்றமர்ந்ததும் முதற் கிரியையாக (வழமையான பூர்வாங்கத்துக்குப் பிறகு) வரப்பிரேஷணம் என்ற மந்திரத்தைக் (முன்னர் குறிப்பிட்ட படி) கூறுதல் இடம் பெறும். மணமகளை வரித்து வரும்படிகூறுவதாக இது அமைவதால் இதன் பிறகே மணமகள் அங்கு அழைத்து வரப்படுவாள்.

ஆனால், இற்றை நாளில் காலவிரயத்தைத் தவிர்ப்பதற்காக மணமகளும் உடன் சென்று மணவறையில் அமர்தல் வழக்கம். இவ்வாறு செல்லும் போது மணமக்கள் கைபற்றிச் செல்லுதல் முறையன்று. ஏனெனில் மந்திர சகிதமாகக் கைப் பிடித்தல் என்னும் பாணிக்கிரகணம் பின்னரே நிகழவிருக்கிறது.

மணவறையில் மணமகள் மணமகனுக்கு வலப்புறம் அமர்ந்திருப் பாள். மணமகனை விஷ்ணுரூபமாகப் பாவித்து மணமகளின் தந்தை பாத பூஜை செய்து உபசரிப்பார்.

## கோத்ரப்ரவசனமும் கன்யாதானமும்

மணமகள் கிழக்கு முகமாகத் தந்தையின் மடியில் இருக்க, அவளது இரு கரங்களையும் சேர்த்து அதில் தாம்பூலம், எலுமிச்சம்பழம், பொன் அல்லது நாணயம் என்பன வைத்துத் தந்தை தனது இடது கையைக் கீழேயும் வலது கையை மேலுமாகப் பற்றிக் கொண்டு தனது கோத்திரம் கூறி மூன்று தலை முறையினரின் பெயரையும் கூறி அதுபோல மணமகனின் கோத்திரமும், மூன்று தலைமுறை என்பவற்றையும் கூறி இந்தக் கன்னிகையை உமக்குத்தருகிறேன் என்று கூற, மணமகளின் தாயார் அக்கரங்களில் தீர்த்தம் விட மணமகன் எழுந்து மேற்கு முகமாக நின்று இருகரங்களினாலும் ஏற்றுக் கொள்வார். இதுவே தத்தம் செய்தல், தாரை வார்த்துக் கொடுத்தல் எனவும் கூறப்படுகிறது.

24962
123898



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''எனக்கு முன் என்குலத்தில் பிறந்த பத்துப்பேரும் நானும் எனக்குப்பின் பிறக்கப் போகும் பத்துப் பேருமாக 21 தலை முறையினருக்கு நற்கதி அளிப்பதற்காகவும் அழிவற்றதும், அளவற்ற ஆனந்தமுடையதும், சாஸ்வதமானதும் ஆகிய பிரம்மலோகத்தை அடைவதற்காகவும் விஷ்ணுரூபராகிய தங்களுக்கு கன்யாதானமென்னும் மகாதானத்தை செய்கிறேன்.'' என்பது பெண்ணின் தந்தை கூறும் மந்திரப் பொருள். கன்னிகாதானம் செய்யும் போது தந்தைக்கு சிறிது மனக்கலக்கம் ஏற்படுவதுண்டு. ஆனால் கலங்காமலிருக்க வேண்டுமெனவும் சில மந்திரங்கள் உச்சரிக்கப்படுகின்றன.

மதுபர்க்கம்:- தேன் தயிர் ஆகியவற்றைக் கலந்து வெண்கலப் பாத்திரத்தில் இரு கூர்ச்சங்குகளால் மூடி அதற்குரிய மந்திரங்கள் கூறி இனிமையும் வீர்யமும் மிகுந்தவனாகச் செய்யும்படி வேண்டி மும்முறை பருகச் செய்வர்.

தூய்மை செய்தல்:- மணமகன் வலது கைப் பெருவிரலும் மோதிர விரலும் சேர்த்து ஒரு தர்ப்பையை எடுத்து ''உன்னிடமுள்ள தோஷங்களை நீக்குகிறேன்'' என்ற மந்திரம் கூறி மணமகளின் புருவங்களிடையே துடைத்துப் பின்புறமாக எறிந்து விடுதல்.

யுகச்சித்ரம்:- தர்ப்பையால் செய்யப்பட்ட சிறு வளையத்தைப் பெண்ணின் தலைமேல் வைத்து, நுகத்தடிபோல் செய்யப்பட்ட சிறிய பொருளை அதன் மீது வலது துவாரமிருக்கும்படி வைத்து அதில் பொன் அல்லது நாணயம் வைத்து ஜலத்தைத் துளியாகவிடும் ஒரு நிகழ்ச்சி சிறப்பானதாகும்.

''நீ அபலா என்ற கன்னிகையை சூரியன் போலப் பிரகாசிக்கச் செய்தாய். அப்படியே இவளையும் நோயற்றவளாயும் பிரகாசமுள்ளவளாகவும் செய்'' என்ற கருத்தமைந்த மந்திரம் இங்கு சொல்லப்படுகிறது. இது ரிக்வேதத்தில் உள்ள ஒரு கதையை அடிப்படையாகக் கொண்ட கிரியையாகும்.

அத்ரி மஹரிஷியின் பெண் அபலா குஷ்டரோகம் காரணமாகக் கணவனால் தள்ளப்பட்டுத் தந்தையின் ஆசிரமத்தில் இந்திரனை நோக்கித் தவம் செய்து அவனுக்குப் பிரியமான சோமரசம் கொடுத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகிழ்வித்தாள். இந்திரன் அவளைத் தன் ரதத்தின் இடைவெளி வழியாகவும், வண்டியின் இடைவெளி மூலமாகவும், நுகத்தடியின் துவாரம் மூலமாகவும் நுழையச் செய்தான். அதனால் அபலா சூரியன் போலப் பிரகாசித்தாள்.

இக்கதை ஸாயனாசார்யர் பாஷ்யத்திலும், ஹரதத்தரின் பாஷ்யத்திலும் சிறு சிறு வேறுபாட்டுடன் காணப்படுகின்றது. இக்கதையினடிப் படையில் மணமகள் நோய் அற்றவளாக அழகோடும் ஆரோக்கியத்தோடும் விளங்க வேண்டும் எனப் பிரார்த்திப்பதே இக்கிரியையின் நோக்கமாகும்.

## மாங்கல்யதாரணம்

தாலி, கூறை முதலிய மங்கலப்பொருட்களைப் பூஜித்துப் பெரியோர்களிடம் காட்டி ஆசிபெற்ற பின் மணமகன் கூறைப் புடைவையைக் கொடுக்க அவள் பெற்றதும் உள்ளே அழைத்துச் சென்று அதனை அணிவித்து மீண்டும் அழைத்து வந்ததும் மாங்கல்யதாரணம் நிகழும். பெண் கிழக்குமுகமாக அமர்ந்திருக்க மணமகன் மேற்கு முகமாக நின்று கொண்டு மஞ்சள் நூலிலே கோக்கப்பட்ட மாங்கல்யத்தைக் கட்டுவான். முதல் முடிச்சை மணமகன் இட்டதும் மற்றும் இரு முடிச்சுகளை மணமகனின் சகோதரிகள் முடிவார்கள். சில இடங்களில் மணமகன் உட்கார்ந்த நிலையில் தாலி கட்டுவதுண்டு. எனினும் மணமகள் மணமகனின் பாததரிசனம் பெறும் வகையில் மேற்கு முகமாக நின்று தாலி கட்டுவதே சிறப்பு.

''நான் சிரஞ்ஜீவியாக இருப்பதற்குக் காரணமான இந்த மாங்கல்யத்தை உன் கழுத்தில் கட்டுகிறேன். பாக்கியவதியே, நீயும் நூறாண்டு வாழ்வாயாக'' என்ற கருத்தமைந்த,

''மங்கல்யம் தந்துநாநேன மமஜீவன ஹேதுனா,
கண்டே பத்னாமி சுபகே த்வம் ஜீவ சரதஸ் சதம்.''

என்ற மந்திரம் தாலிகட்டும் போது கூறப்படுகிறது.

## யோக்த்ரபந்தனம்

இதன் பின் சபையோருக்குக் கற்கண்டு வழங்குதல் நிகழும். வரன் வதூவின் இடுப்பில் புதிய புடைவையைச் சுற்றி மூன்று சுற்றாக தர்ப்பைக்கயிற்றைச் சுற்றிக் கட்டுவான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''ஓ அக்னீ, இனி நான் செய்யப்போகும் சகல விரத, ஹோமங்களுக்கும் இவள் துணையாக இருக்கப் போகிறாள். இவள் நல்ல மனம், சந்ததி, ஆரோக்கியம், செல்வம் இவற்றை விரும்புகிறாள். அவற்றை நீ தருவதற்காகவும் இவள் தகுதி உடையவள் ஆவதற்கும் இதனைக் கட்டுகிறேன்'' என அவனால் அப்போது வேண்டப்படுகிறது. வைதிக யோக்கியதையைத் தரும் தர்ப்பைக்கயிறு உபநயனத்திலும் இடம் பெறுகிறது. முதலில் நாபிக்கு வடக்கே முடிந்து பிரதக்ஷிணமாகச் சுற்றி தென்புறத்தில் முடிச்சு வரும்படி தர்ப்பைக்கயிறு கட்டப்பட வேண்டும்.

## பாணிக்கிரகணம்

கைப்பிடித்தல் என்பதே இதன் பொருள். முதன்முதல் மந்திரசகிதமாக மணமகளின் கரங்களை மணமகன் பற்றுவதன் மூலம் அன்பினை எடுத்துக்காட்டுவதாக இது அமைகிறது.

பெண்ணின் மேல் நோக்கிக் குவிந்த வலது கையை வலது கையினால் பற்றிப் பிடிக்க வேண்டும்.

''ஓ பெண்ணே, பகன்,சூர்யன்,அர்யமா, இந்திரன் மற்றும் தேவர்கள் உன்னை எனக்கு க்ருஹஸ்தாசிரமம் நடத்தும்படி கொடுத்தார்கள். அவர்களது அருளோடு அவர்கள் சாக்ஷியாக நான் உன்னை மணக்கிறேன். நீயும் நானும் வயோதிபத்திலும் பிரியாதிருக்க வேண்டுமென உன்கையை நான் பிடிக்கின்றேன்.'' என்ற பொருள் தரும் மந்திரம் கூறப்படுகிறது.

## சப்தபதி

விவாஹத்தின் மிக முக்கியமான கிரியை இது. ஏழு அடி ஒன்றாக நடந்தவர்கள் பிரிக்க முடியாத நண்பர்களாகிவிடுவர் என்பது வேத காலம் முதலே இருந்து வரும் நம்பிக்கை. பாணிக்கிரகணம் செய்தபடியே மணமகன் மணமகளது வலது பாதத்தைத் தன் இடது கையினால் பற்றி அக்கினிக்கு வடக்கே நெல்லினால் போடப்பட்டிருக்கும் ஏழு அடிகளில் அடியெடுத்து வைக்க வேண்டும். நிறைய அன்னம் கிடைக்கவும், பலத்தை அளிக்கவும், நற்கர்மாக்களைச் செய்யவும், சுகத்தைக் கொடுக்கவும், பசுவையும் செல்வத்தையும் கொடுக்கடுவும், ஆறு ருதுக்களிலும் நன்மை உண்டாகவும் ரித்விக்குகள் தம் கடமைகளைச் சிறப்பாகச் செய்யவும் ஏழு அடிகளிலும் விஷ்ணு உன்னைத் தொடர்ந்து வரட்டும்'' என்று அர்த்தபுஷ்டியுடன் கூடிய மந்திரம் இங்கு கூறப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சப்தபதியின் முடிவில் கூறப்படும் மந்திரம் மிகவும் சிறப்பு வாய்ந்தது.

பெண்ணே, ஏழடி தூரம் என்னுடன் நடந்து வந்த நீ எனக்கு சிநேகிதியாவாய். உன்னிடத்தில் நான் சிநேகிதம் கொள்கிறேன். நாம் ஒருவரை ஒருவர் பிரிய மாட்டோம். நாம் இருவரும் சேர்ந்து நற்கருமங்கள் செய்வோம். பரஸ்பரம் சுவை உள்ளவர்களாகவும் நல்ல மனமுடையவர்களாகவும் இருப்போம்,

''நான் ரிக், (கவிதை); நீ சாமம் (இசை); நான் வானம்; நீ பூமி; நான் மனம்; நீ வாக்கு;''

## விவாஹ ஹோமம்

சப்தபதீ முடிந்த பின் கணவன் மனைவியாக இருவரும் சேர்ந்து விவாஹ ஹோமத்தை நடத்துவர்.

## அம்மி மிதித்தல்

மணமக்கள் பாணிக்கிரகனம் செய்தபடி வடக்கே வைக்கப்பட்டுள்ள அம்மியின் அருகில் சென்று மணமகன் தனது இடது கையால் மணமகளின் வலது கால் பெருவிரலைப் பற்றி அம்மி மீது எடுத்து வைக்க வேண்டும். அம்மியில் பெண் ஏறி நிற்க வேண்டும் என்பர் சிலர்.

''இக்கல் மீது ஏறி சம்சாரத்தில் துன்ப நிலை வரும் போது இக்கல் போல் இரு'' என்று அந்த நேரம் கூறப்படும். இதை அடுத்து மெட்டி அணிவித்தல் சம்பிரதாயம். பின் திரும்பிப் பழைய இடம் வந்து உற்கார்ந்து லாஜஹோமம் எனப்படும் 'பொரியிடல்' நிகழ்த்துவர்.

மணப்பெண்ணின் உள்ளங்கைகளில் நெய் சிறிது தடவிய பின் பெண்ணின் சகோதரன் அவள் கையில் நெற்பொரி கொடுக்க மணமகன் அவளுடைய கரங்களுக்குக் கீழே தனது இடது கையையும் மேலே வலது கையையும் வைத்து அக்கினியில் அதனைத் தூவுதல் நிகழும்.

இதன்பின் அக்கினியை வலம் வந்து அம்மி வரை சென்று மறுமடியும் அம்மியில் ஏறி நின்று இடது காலில் மெட்டி அணிந்த பின் திரும்பவும் தமது இடம் வந்து இரண்டாம் முறை லாஜஹோமம் செய்வர். மறுபடியும் வலம் வந்து இதேபோல் அம்மி மிதித்து மூன்றாம் முறை லாஜஹோமம் நிகழும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதன் பின் ஜயாதி ஹோமம் செய்து ஆசீர்வாதத்துடன் நிறைவு செய்து வரன் வீடு சென்று பிரவேசஹோமம் ஔபாசனம் செய்தலும் மூன்று நாள் விரதமநுஷ்டித்து நான்காம் நாள் சேஷஹோமம் செய்தபின் கர்ப்பாதான மந்திரங்கள் கூறிய பின் சாந்தி மூகூர்த்தம் செய்வது பழைய வைதிக மரபு. இப்போது இவை சாத்தியமில்லை என்பதால் மாலையில் மணமகனது இல்லம் சென்று பிரவேச ஹோமம், சேஷஹோமம், பிராயச்சித்த ஹோமங்கள் செய்து ஜயாதி ஹோமம் செய்த பின் ஆசீர்வாதம் மங்கள ஆரத்தி என்பவற்றுடன் விவாஹம் இனிது நிறைவேறுகிறது.

விவாஹக்கிரியைகளின் போது அடிக்கடி பெரியோர்களை வணங்கி அவர்களுக்கு தாம்பூல தஷிணைகள் வழங்கி அவர்களிடம் அநுக்ஞை பெற்றே கிரியைகள் ஒவ்வொன்றும் நிகழும். நாந்தீசிராத்தம் என்று பிதிரர்களின் ஆசி பெறும் நிகழ்ச்சியும் உண்டு. இயன்றவரையில் தம்பதி பூஜை செய்தல் சிறப்பு. நவக்ரகப் பிரீதிக்கான தானங்களும் செய்யப் படும். இவையெல்லாம் தேவர், பிதிரர், பெரியோர்களை மதிக்கும் நமது பண்பாட்டு மரபினை சுட்டி நிற்கின்றன.

இங்கு குறிப்பிடப்படாமல் இன்னும் பல சிறு கிரியைகள் இடை யிடையே நிகழ்வதுண்டு. முக்கியமானவை மட்டுமே இங்கு கூறப்பட் டுள்ளன.

இவற்றின் முடிவில் விருந்துபசாரம் நிகழும். மாலையில் மணம கனில்லத்தில் நலுங்கு என்னும் சம்பிரதாயமான வேடிக்கை நிகழ்வு நடைபெறுகிறது.

## நலங்கு

இது ஒரு மகிழ்ச்சியான விளையாட்டுச் சடங்கு. முற்காலத்தில் பால்யவிவாஹம் நடைபெறுவதால் சிறுபிள்ளைகளிடையே பழக்கத்தை ஏற்படுத்தும் விளையாட்டாக இது ஆரம்பமாகி இருக்க வேண்டும். பின்னரும், தம்பதிகள் ஒருவரை ஒருவர் புரிந்து கொள்ளவும், மகிழ்ச்சியுடன் போட்டி போட்டு விளையாடவும், விட்டுக் கொடுக்கும் மனப்பான்மையை உருவாக்கவும் உதவுகின்றது. பகல் முழுதும் வைதிகக்கிகயைகளில் ஓமப் புகைநடுவே இருந்து களைத்தவர்கள் தம்மை ஆசுவாசப்படுத்த உதவும் ஒரு நிகழ்வாகவும் இது அமைகிறது.

மணமக்கள் வீட்டில் விவாஹசோபனம் நிறைவு பெற்று மாலையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணமகன் வீடு வந்ததும் பிரவேசஹோமம், ஔபாசனம், சேஷஹோமம் முதலியன நிகழும். அதன் பின் ஆசீர்வாதமும் மங்கள ஆரத்தியும் செய்த பிறகு மணமகள் மணமகனை நோக்கி ''நலங்கு விளையாட வாருங்கள்'' என்று கேட்பாள். மணமகனும் சம்மதித்ததும் இருவருமாக மணப்பந்தலில் எதிரும் புதிருமாக சுமார் நான்கடி இடைவெளியில் உட்காருவர்.

''நலங்கிட வாருமையா'' முதலிய பாடல்களைப் பெண்கள் பாடுவார்கள். இருவரையும் சூழ்ந்து வட்டமாகச் சிறியோரும் பெரியோரும் ஆவலுடன் கூடி நிற்பர்.

மணமகள் முதலில் எழுந்து மணமகனின் பாதங்கள் இரண்டையும் சுற்றி நலுங்கு மஞ்சள் பூசிவிடுவாள். (மஞ்சள் அரைத்துச் சுண்ணாம்பும் சேர்த்து உருட்டி வைக்கப்பட்டிருப்பதே நலுங்கு மஞ்சளாகும்.) பின்னர் பன்னீர் தெளித்து சந்தனம் குங்குமம் பூசிவிடுவாள். வாசனைப் பவுடர் சீப்பு இவற்றைக் கொடுத்து அழகுபடுத்துவதற்கு உதவியாகக் கண்ணாடியைக் காட்டி நிற்பாள். பின்னர் சுட்ட அப்பளங்கள் இரண்டை மணமகன் சிரசின்மேல் நொறுக்கி விட்டு வந்து அமருவாள்.

இதே செயல்களை இப்போது மணமகன் மணமகளுக்குச் செய்வான். ஆனால் உட்கார்ந்திருந்தவாறே செய்வது மரபு. பின்னர் மணமகள் மணமகனைப் பார்த்து ''உப்பு தருவேன், பருப்புத் தாருங்கள்'' எனக் கேட்டு உப்புக் கிண்ணத்தை நீட்டுவாள். அவனும் அதை வாங்கிக் கொண்டு பருப்புக் கிண்ணத்தைக் கொடுப்பான்.

பரஸ்பரம் கொடுத்து வாங்கும் பண்பு வெளிப்படுத்தப்படுவதுடன் உப்பின் முக்கியத்துவம் குறியீடாகக் காட்டப்பட்டு இல்லற தர்மம் சிறக்கப் பெண் அவசியம் என்பது விளக்கப்படுகிறது.

மஞ்சள் பூசிய தேங்காயொன்றைச் சிறிது நேரம் இருவரும் உருட்டி விளையாடிய பின் நடுவிலே தேங்காயை வைத்து மணமகள் இருகைகளாலும் மணமகன் ஒரு கையாலும் பற்றி இருவரும் தம்பக்கமாகத் தேங்காயை இழுப்பர். இந்தப் பலப்பரீட்சை சிரிப்போடும் சுவையோடும் மும்முறை நிகழும். இதன் பின் இருவரும் பரஸ்பரம் தாம்பூலம் பரிமாறிக் கொள்வர். இதற்கென்றே தயாரிக்கப்பட்ட உலோகத் தேங்காய் சில இடங்களில் பயன்படுத்துகிறார்கள். இது நலுங்குத் தேங்காய் எனப்படும்.

சில இடங்களில் மணமக்கள் பூப்பந்து எறிந்து விளையாடுவதும் உண்டு.

மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணமகன் மணமகளுக்கு ஒரு தட்டிலே இணைக்கூறை அல்லது நாலாம் கூறை எனப்படும் புடைவையையும் ஏனைய மங்களப் பொருட்களையும் வைத்து வழங்குவதுடன் நலுங்கு பூர்த்தியாகும்.

சில இடங்களில் மணமக்கள் தாங்களே நலுங்குப் பாடல்களையும் வேறு பாடல்களையும் மாறிமாறிப் பாடுவர்.

## நலுங்கிற்குத் தேவையான பொருட்கள்

1) ஒரு கிண்ணத்தில் உப்பு

2) ஒரு கிண்ணத்தில் துவரம் பருப்பு

3) சந்தனம் - குங்குமம் - பன்னீர்ச்செம்பு

4) நலுங்கு மஞ்சள் (சுண்ணாம்பு - மஞ்சள்)

5) பவுடர்

6) சீப்பு

7) கண்ணாடி

8) தாம்பூலம் (பீடா)

9) சுட்ட அப்பளம் நான்கு

10) மஞ்சள் பூசி தேங்காய்

11) ஒரு தட்டில் புடைவை, வெற்றிலை, பாக்கு, மற்றும் மங்கலப் பொருட்கள்.

### மணவறை ஏற்பாடுகள்

கிழக்கு முகமாக மணவறை அமைக்கப்பட்டு அதன்முன் மணமக்கள் அமரக் கம்பளம் விரிக்கப்பட்டு அதற்கு முன் கல்யாண மண்டபக்கோலம் இடப்படும். பொதுவாகப் புள்ளிக் கோலம் இடாமல் கீற்றுக் கோலங்கள் இடுவதே மரபு, தெற்குப்புறத்திலே கிரியைகள் நடத்தி வைக்கும் குரு அமர்வதற்கு கம்பளம் அல்லது மான்தோல் விரிக்கப்பட்டு இருக்கும். மாவிலை, சரங்கள் தொங்க விடப்பட்டு இருக்கும். சோடிக் குத்துவிளக்கு, நிறைகுடம், சந்தனம், வெற்றிலை, பாக்கு,பழம் என்பன கிரியை நிகழும் இடத்தின் கிழக்குப்புறத்தில் வைக்கப்படும். வடக்குப்புறத்தில் அம்மி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைக்கப்படும். அருகே மெட்டிகள் இருக்கும். நடுவிலே அக்கினி மேடை மணல், உமி பரப்பி அதற்குரிய பரிதி, பரிஸ்தரணத் தர்ப்பைகள் பாத்திர சாதனங்களுடன் காணப்படும். அக்கினி திசையில் அங்குரார்ப்பணத்துக்கான பாலிகைச்சிட்டிகள், நவதானியம்,பால், என்பனவும் அக்கினிமேடை அருகே மஞ்சள் பிள்ளையார், புண்யாக கும்பம், உதக சாந்தி கும்பம் என்பனவும் பூஜைக்குரிய சந்தனம், புஷ்பம், பத்ரம், அக்ஷதை, தக்ஷிணைகள், குங்குமம் என்பவற்றைக் கொண்ட தட்டு மற்றும் தீபக் கால் கற்பூரத்தட்டு, மணி, குத்துவிளக்கு என்பன தயார் நிலையில இருக்கும். மஞ்சள் பூசிய தேங்காய்கள் சுமார் 5 கற்பூரம் தேங்காயெண்ணெய், நெய், நெய்க்கிண்ணம், சமித்து முதலியன ஒரு புறத்தே தயாராக இருக்கும். தேங்காய் உடைப்பதற்காக கத்தியும் ஒரு சட்டியும் இருக்கும். மாங்கல்யதாரணமாகியதும் வழங்கப்படுவதற்காக இரண்டு தட்டுகளில் கற்கண்டு இருக்கும். இன்னொரு தட்டில் கூறை, மாங்கல்யம், மற்றும் மங்கலப் பொருட்கள் இருக்கும். தேவைக்கேற்றபடி அவ்வப்போது எடுப்பதற்காக ஒரு தட்டில் வாழைப்பழம், வெற்றிலை, பாக்கு என்பன வைக்கப்பட்டிருக்கும்.

இடுப்பில் கட்டுவதற்கான தர்ப்பைக் கயிறு, தர்ப்பையாலான திரிகணை போன்ற வளையம், சிறிய நுகத்தடி, ஹோமத்துக்கு அன்னம், பாலிகை இடுவதற்கான தானியங்கள் (நெல், எள்,உழுந்து, பயறு, வெண்கடுகு ஆகியன மட்டும்) மதுபர்க்கம் (தயிர் - தேன்), நெற்பொரி, ஆகிய பொருட்களும் உரிய இடங்களில் வைக்கப்பட்டிருக்கும்.

பூந்தியினால் கோபுரம் போல் செய்யப்பட்ட மங்கலப் பொருளாகிய பருப்புத் தேங்காய் ஒரு தட்டில் இருக்கும். சில இடங்களில் கை முறுக்கும் வைப்பதுண்டு.

## மணமகன் வீட்டில் காலையில் வ்ரத உத்ஸர் ஜனம், சமாவர்த்தனம், காசியாத்திரை முதலியவற்றுக்குத் தேவையான பொருட்கள்

விக்னேஸ்வர பூஜை, புண்யாக வாசனம் ஆகியவற்றுக்கு வேண்டிய பொருட்களும், அனுக்ஞைக்கு வேண்டிய தக்ஷிணைகள், தேங்காய், வெற்றிலை, பாக்கு, பழம், அக்ஷதை அறுகு வில்வம், பத்ரம், புஷ்பம் முதலியன சமிதாதானத்துக்கு அக்னிமேடை (மணல் - உமி) தர்ப்பைகள் பலாசமிலை சுமார் 15, ஸமித்து, பலாசதண்டம் நெய், மற்றும் கிண்ணங்களும் தீபம் முதலிய பூஜோபகரணங்களும். பெரிய


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குத்துவிளக்கு, நிறைகுடம், சோடிக்குத்துவிளக்கு, அங்குரார்ப்பணத் துக்குரிய ஐந்து பாலிகைச் சிட்டிகள், மணலுடன், கிண்ணத்தில் பால், பாலிகையிடுவதற்கு நெல், எள், உழுந்து, பயறு, வெண்கடுகு ஆகிய ஐந்து தானியங்கள். ப்ரதிசரத்துக்கு (ரக்ஷாபந்தனம் வேண்டிய மஞ்சள் நூல் (ஒன்பது இழைகளாலான முறுக்கிய பருத்தி நூல் மஞ்சள் பூசப்பட்டது) விபூதி, சந்தனம், குங்குமம், பச்சரிசி, மாவிலை காவிவஸ்திரம், தர்ப்பைக் கயிறு, பலாசதண்டம், பூணூல், முகம்பார்க்கும் கண்ணாடி, புஸ்தகம், விசிறி, குடை, தண்டு, கமண்டலம், பாதரக்ஷை (காசியாத்திரைக்கு) ஆரத்தித்தட்டு, சிறுதாம்பாளங்கள் சில.

* * * * * *





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயல் 3

## கவனத்துக்குரியனவும் தவிர்க்க வேண்டியவையும்

விவாஹம் தொடர்பாக சில விடயங்கள் இங்கு சுட்டிக்காட்டுதல் அவசியம் எனக் கருதுகிறேன்.

1) கால நிர்ணயத்தைப் பேணுதல்

2) பாரம்பரியக் கிரியைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து, அவற்றின் தாற்பர்யங்களை உணர்ந்து, சிரத்தையுடன் ஈடுபடுதல்.

3) அநாவசியமான ஆடம்பரங்களையும் நவீன நாகரிகத்தோடிணைந்த புறச்சடங்குகளையும் கூடியவரை தவிர்த்தல்.

4) இவற்றுக்கு வாய்ப்பாக மணமக்களும் இருதரப்புப் பெற்றோரும் இயன்ற வரையில் முன்னதாகவே விவாஹ சம்பிரதாயங்கள் பற்றிய நூல்களை வாசிப்பதன் மூலம் அவை பற்றிய விளக்கங் களை அறிந்திருத்தல்.

5) விவாஹம் நடைபெறும் வேளையில் மணவறை அருகே அமர்ந் திருக்கும் பெரியோர்களும் இளைஞர்களும் உலகியல் சம்பந்தமான பேச்சுக்களில் ஈடுபடாமல் அங்கு நடைபெறும் காரியங்களை அக்கறையோடு அவதானித்தல்.

இத்தகைய செயற்பாடுகள் நமது விவாஹம் என்னும் புனிதச் சடங்கை மரபு முறைப்படி பேணிப்பாதுகாக்க உதவவல்லன.

மேலும், ஐந்நூறு வருடங்களுக்கு முன்னரே வேங்கடாத்திரி என்ற கவிஞர் தமது ''விஸ்வ குணாதர்ச சம்பூ'' என்ற காவியத்தில், ''உபநயனம் விவாஹம் இரண்டும் இந்தக் கலியில் உத்ஸவத்தை முக்கியமாகக் கொண்டவையாகிவிட்டன'' என்று கவலைப்பட்டார்.

இன்றைய திருமண நிகழ்வுகளில் பெரும்பாலும் புகைப்பட, வீடி யோக் கலைஞர்களுக்கே முக்கியத்துவம் வழங்கப்படுகிறது. அவர்களை முதன்மைப்படுத்தியே மணவறை அலங்காரங்களைக் கவனித்தலும் கிரியைகளை அவர்களுக்கேற்றபடி நடிப்பாக மேற்கொள்வதும் பரவலாக அவதானிக்கப்படுகிறது. பல இடங்களில் படங்களுக்கு இடைஞ்சலாக இருக்கிறதென ஹோம அக்நியை அணைப்பது அல்லது நினைத்தவாறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தக் கலைஞர்கள் (அநாசாரமான ஆடைகளுடன்) தாமாகவே கற்பூரத்தைக் 'கொளுத்திப்' போட்டு எரியச் செய்வதும் நடைபெறுகிறது.

தாலிகட்ட ஆயத்தமாகும் போது, ''கொஞ்சம் பொறுங்கோ'' என்று அபசகுனமாகத் தடுப்பதும் தாலிகட்டிய பின் படத்துக்காக மறுபடி தாலிகட்டுவதாக நடிக்கச் செய்வதும் அநாசாரமான விடயங்கள்.

கன்னிகாதானம், மாங்கல்ய தாரணம் ஆகிய இரு நிகழ்வுகளின் போதும் மணமகள் மணையில் கிழக்குமுகமாக இருக்க, மணமகன் மேற்கு முகமாக நிற்க வேண்டும் என்பதே விதிமுறை. ஆனால் புகைப்படக் கோணத்துக்கு வாய்ப்பாக அக்னி திசையில் வடக்கு நோக்கி நிற்பதும் அந்த நேரத்தில் புகைப்படப்பிடிப்பாளரை நோக்கித் திரும்பு வதும் முறையான செயல்கள் அல்ல.

இங்கு புகைப்பட வீடியோக் கலைஞர்கள் அவமதிக்கப்படுவதா கவோ குறைத்து மதிப்பிடப்படுவதாகவோ கருதக்கூடாது. நிகழ்வுகள் இயல்பாக உள்ள முறைப்படியே நடைபெற வேண்டும். அந்த நிகழ் வுகளை அப்படியே அக்கலைஞர்கள் பதிவு செய்ய வேண்டும். செயற் கைத் தன்மை இருக்கலாகாது. அநுபவமூலம் நிகழ்வுகளின் தன்மையை உணர்ந்து அல்லது முன்னதாகவே கேட்டறிந்து அதற்கேற்றபடி தமது நிலையை கலைஞர்கள் அமைத்துக் கொள்ள வேண்டும்.

மற்றொரு முக்கிய விடயமான கால நிர்ணயத்தை கவனத்தில் கொள்ளாமையால் பல இடங்களில் முகூர்த்த நேரமே தவறிவிடுவதைக் காண்கிறோம். அடுத்து வர இருக்கும் முக்கிய கிரியைகளுக்கேற்றவாறு சம்பிரதாய நிகழ்ச்சிகளில் நேரத்தை சீர் செய்து கொள்ள வேண்டும்.

ஊஞ்சல், நலுங்கு முதலிய நிகழ்ச்சிகளில் பாடவருவோரின் வித்துவத்தைக் காட்டுவதற்காகவோ, பலருக்குச் சந்தர்ப்பம் கொடுக்க வேண்டும் என்பதற்காகவோ பல பாடல்களைப் பாடி நீட்டி முழக்காமல் வகைக்கு ஒன்றாகப் பாடிக் கச்சிதமாக முடிக்க வேண்டும். திருஷ்டி சுற்றிப் போடுதல் முடியும் போது பாடலும் முடிய வேண்டும். நலுங்கு விளையாட்டு முடியும் போது அதற்குரிய பாடலும் முடிய வேண்டும். பாடுபவருடன் ஒத்துழைக்கக்கூடிய நாதஸ்வரக் கலைஞர் இருப்பாராயின் (காலமும் இடம் கொடுக்குமாயின்) பொருத்தமான முறையில் நாதஸ்வரத்தை இணையாக வாசிக்கச் செய்யலாம். தவிர்க்க வேண்டின் தவிர்க்கலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம்

நிச்சயதார்த்தம் திருமணப்பதிவு என்பன பற்றியும் சிறிது சிந்திக் கலாம். பிராமணர்களைப் பொறுத்த வரையில் கர்மாக்களுக்கு முக்கியத் துவம் கொடுக்க வேண்டும். அதனால் திருமணப்பதிவு முதலில் நடத்தா மல் விவாஹப் பேச்சுக்கள் நிகழ்ந்ததும் விரைவாகவே விவாஹத்தை நடத்தி அன்றைய தினம் மாலையில் சட்ட ரீதியான திருமணப்பதிவை நடத்தவது நன்று.

தவிர்க்க முடியாத காரணங்களால் முதலிலேயே திருமணப்பதிவு நிகழ வேண்டி ஏற்படுமாயின், அத்தினத்தில் முதலிலேயே வைதிகமாக நிச்சயதார்த்தம் செய்து விடுவது சிறப்பு. உண்மையாக நிச்சயதார்த்தம், திருமணப்பதிவு ஆகியவற்றிலும் நம்மவர்கள் சிலவேளைகளில் தவறிழைக்கின்றனர்.

திருமண தினத்தில் மந்திர சகிதமாகப் பாணிக்கிரகணம் என்ற கிரியையும் (கைப்பிடித்தல்) பெரியோர் முன்னிலையில் மாலை மாற்றுதல் என்ற சடங்கும் நிகழ இருப்பதனால் அதற்கு முன் இவை நிகழ்வது முறையன்று. எனவே நிச்சயதார்த்தம், திருமணப்பதிவு முதலியவற்றில் மாலைமாற்றுதல், மோதிரம் மாற்றுதல் ஆகியவற்றைத் தவிர்த்துக் கொள்வதே வைதிக மரபுக்கு ஏற்றதாகும்.

ஆசீர்வாதம் நிகழும் போது மங்கலப் பொருளாகிய அக்ஷதையத் தூர இருந்தவாறே மணமக்களை நோக்கி எறிந்து சிதறுவதைத்தவிர்த்து வேறொரு மாற்று நடவடிக்கையைப் பெரியோர்கள் சிலர் செய்கின்றனர். மந்திர உச்சாரணம் முடிந்தவுடன் மணமக்கள் பெரியோர்களிடம் சென்று அட்சதையை வாங்கிக் கொண்டு மணவறைக்கு வந்து சபையினரை ஒருசேர நமஸ்கரித்து எழுதல் இந்த முறை ஆகும். இது வரவேற்கத் தக்கதன்றோ.

இங்கு கூறப்பட்ட விடயங்கள் கட்டளையாகவோ சட்டதிட்டமா கவோ கூறப்படவில்லை. ஆலோசனைகளாகவே கூறப்படுகின்றன. யாவரும் அக்கறையோடு கவனமெடுத்தால், உரிய காலத்தில் நமது பண்பாட்டு மரபைப் பேணி நல்ல காரியத்தை நல்ல முறையில் நிறைவு செய்து சம்பந்தப்பட்டோர் அனைவருக்கும் மகிழ்ச்சியைத் தரலாம்.

* * * * * *

123898



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயல் 4

**கல்யாணப்பாடல்கள்**

1) எம்மால் புதிதாக ஆக்கப்பெற்றவை

2) இயலிசை வாரிதி என்.வீரமணி ஐயர் அவர்கள் இயற்றி வழங்கியவை.

3) மரபு வழிபட்ட சில தமிழ்ப்பாடல்கள்

4) சத்குரு ஸ்ரீ தியாகராஜ சுவாமிகளின் உற்சவ சம்பிரதாயக் கீர்த்தனைகள் சில.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இயலிசைவாரிதி என்.வீரமணி ஐயர் அவர்கள் வழங்கிய சிறப்புப்பாயிரம்

மணிநாத ஓசை ஒலி ஆசி நல்க
மயிலவனின் திருக்கோவில் பக்தர் சூழ்ந்தே
அணியாரக் கடம்பனவன் அழகு பாட
ஆனந்தத் தமிழ் முருகன் ஞானம் சொட்டும்
பணியான செந்தமிழின் பாப்பு னைந்தே
பாலசுப்ர மணியனவன் பதத்தில் சூட்டும்
கனியான கவிஞனவன் கோப்பாய் சிவம்
கந்தனின் அருளாலே கனிந்து வாழி.

எத்தனையோ எழில் கொஞ்சும் கவிதை யாத்து
என்றென்றும் தமிழன்னை பதத்தில் சூட்டிப்
பக்தியுடன் புதுமை நிறை மணிக் கருத்து
பக்குவம்சேர் பதக்கமாதய் பொதிந்து வைத்து
சக்தியவள் அருளாலே சங்கீ தஞ்சேர்
சாந்திதரும் கீர்த்தனங்கள் பாடும் தெய்வ
வித்துவம்சேர் கோப்பாயூர்ச் சிவக் கவிஞன்
விவாகசோ பனப்பாடல் தந்தான் வாழி.

"சுபம்"

இணுவில்.
8-11-97.

என். வீரமணி ஐயர்.

24998 N3



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்யாணப் பாடல்கள்

### புதிதாக எமமால் இயற்றப்பெற்றவை

1) ராகம்:- அனந்தபைரவி தாளம்:- கண்டசாபு

பால கணபதிக்கு லாலி - மகிமைமிகு
பரம சிவனார்க்கும் லாலி
நீல நெடுமாற்கு லாலி - நித்தியசுப
நீள்கருணை மலராட்கும் லாலி
(பால)

நீலமலை நாயகிக்கு லாலி - நிறைவுதரும்
நிமலனருள் கந்தனுக்கும் லாலி
சீலமிகு மணமக்கள் லாலி - திருவளரும்
செழுமைமிகு நல்வாழ்க்கை வாழி
(பாலா)

2) ராகம் :- நீலாம்பரி தாளம்:- கண்டசாபு

சந்ததமும் நல்லவழி
காட்டு மருள் கணபதியின்
பாதங்கட்கு லாலி

சதுர்மறையின் நாயகனாம்
சங்கரரின் பொற்பாத
கமலங்கட்கு லாலி

செந்தமிழின் வேலனுக்குச்
செல்வியரின் லோலனுக்குப்
பாலனுக்கு லாலி

செந்திருவின் செழுங்கமலத்
திருப்பாத இணைகளுக்கும்
சீரான லாலி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முந்துதமிழ் மாலையினைச்
சந்தமுடன் சாற்றிவர
மூவுலகும் லாலி

முழுநிலவின் குளுமையுடன்
மணமக்கள் வாழ்க்கையிலே
தினமும் லாலி.

3) ராகம்:- சிந்துபைரவி தாளம்:- ஆதி

பல்லவி

வேலன் விழிகள் என்னை வேலாய் வருத்துதடி
விம்மிதமாய் ஏதோ இதயம் நிரப்புதடி
(வேலன்)

அநுபல்லவி

கோல அழகுதனைக் காண மனம் நினைக்கும்
கூட வரும் நாணம் மாதென் உளம் நனைக்கும்
(வேலன்)

சரணம்

ஓமப் புகை கமழும் உதட்டில் நகைதவழும்
உடையவர் கரங்கள் பற்றி ஏழடி எடுத்து வைக்கும்
சேமக் கரங்கள் பற்றித் தீவலம் வரும் அப்போது
தேவதேவியர் மகிழ்ந்தே வாழ்கென வாழ்த்தி நிற்பர்.
(வேலன்)

4. ராகம்:- பெஹாக் தாளம்:- ஆதி திஸ்ர

பல்லவி

மாலை மாற்றினாள் கோதை மாலை மாற்றினாள்
மங்கைசிவ காமிநட ராஜனுடன் மனமகிழ்வாய்
(மாலை)

மாலை வானம் போல நாணம் வதனமெங்கும் வண்ணம் பூச
மங்கைகரம் பூங்கொடியாய் மலர்மாலை தாங்கிவர
நீலவண்ணக் கண்ணன் முன்பு ராதை வந்து நின்றது போல்
நித்யசுப மங்கலமாய் நீளும் இன்ப வாழ்வினுக்காய்.
(மாலை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாதமழை பொழிய அன்பர் நாவினிக்க வாழ்த்துரைக்க
நங்கையர்கள் பூச்சொரிய மழலையர்புன் னகைவிரிய
வேதமழை கோஷமிட வெண்புகையும் சூழ்ந்திருக்க
விநயமுடன் கால்கள் பின்னக் கண்கள் மின்னக் கன்னிகையாள்.
(மாலை)

5) ராகம்:- ஆனந்தபரைவி தாளம்:- கண்டசாபு

பொன்மகளே பூமணக்கப்
பொன்னூஞ்சல் ஆடீர்
மன்மதனும் ரதிபோல
மகிழ்ந்தூஞ்சல் ஆடீர்
அன்புடனே மைத்துனிகள்
ஆதரவாய் வடம்தழுவ
இன்பமுறு பாடலிசை
ஏழிசையில் இசைந்தொலிப்ப
(பொன்மகளே)

தென்றல்வந்து தாலாட்ட
தேனீக்கள் ஸ்ருதி கூட்ட
இன்றுமுதல் இன்பமென
ஏழுலகம் வாழ்த்துரைக்க
கன்னலுடன் தேன்சுவையும்
கடிமணமும் மனம் நிரப்ப
அன்பு மிகு இல்லறத்தில்
அடியெடுத்து ஆடுகவே
(பொன்மகளே)

மருமகனார் பாதங்களில்
மாலவனைக் கண்டு மகள்
திருவாகும் நினைவுனே
நீராட்டும் செழுமை இது
பாலாலே கால்கழுவிப்
பட்டாலே அதைத்துடைத்து
மேலான சந்தனமும்
சாத்திடவே லாலி
(பொன்மகளே)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மங்கலம் செய் தேங்காயும்
மாமிகரம் கொடுத்திருப்ப
பங்கயப் பொன் முகமலரில்
பைந்தமிழின் முறுவல்
செங்கரங்கள் சிலிர்த்திருப்பச்
செங்கயல்கள் துடிதுடிப்ப
மங்கைகரம் மாலவனார்
பற்றியிருந் தாடீர்...............
மங்கைகரம் மாலவனார்
பற்றிவர லாலீ...........

(பொன்மகளே)

6) ராகம்:- உறிந்தோளம் தாளம்:- ஆதி

பல்லவி

நலுங்கிட வாருங்கள் நாயகரே - இங்கு
நலுங்கிட வாருங்கள் நாயகரே

(நலுங்)

அநுபல்லவி

சலங்கை குலுங்கிட வளைகள் கிலுங்கிட
சரசர வென்றுபட் டாடை ஒலித்திட

(நலுங்)

சரணம்.

சுகந்தசந் தனத்தினைச் சுந்தரமாய்ப் பூசிச்
சுவையான கதைபேசிப் பாட்டுக்கள் பாடிட
வசந்தங்கள் வாழ்த்திட வண்டினம் பாடிட
வாழிய வாழி என்றே வந்தவர் குரல் எழுப்ப.

(நலுங்)

* * * * *





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*இயலிசைவாரிதி என். வீரமணி ஐயர் அவர்கள் இயற்றியவை*

## 1. கன்னியூஞ்சல்

ராகம்:- குறிஞ்சி தாளம்:- ஆதி

கன்னியரின் நாற்குணங்கள் கால்க ளாகக்
கற்பு எனும் திண்மையதே விட்டமாக
நன்னிறைவாய்ப் பெண்மையதே வடங்களாக
நளினமிகு பருவமெனும் ஊஞ்சல் வைகி
பொன்னினணி சூடிமலர் பூத்த பூவே
புல்லரிக்கக் கன்னியூஞ்சல் ஆடாய் கண்ணே
மன்னிடுசீர் மங்களமும் பொலிய ஊஞ்சல்
மங்கையே நீ மனமார ஆடாய் கண்ணே.

சென்னியிலே பிறைரவியின் அணிகள் ஆட
செவிகளிலே குண்டலங்கள் திகழ்ந்தே ஆட
வன்னவெழில் கரங்களிலே வளைகுலுங்க
வண்ணச் செம் பட்டாடை புனைந்திலங்க
கன்னிகையாய் மலர்ந்தமலர் ஆனாய் நீயே
கல்யாணக் கன்னியூஞ்சல் ஆடாய் கண்ணே
புன்னகையும் பத்திலங்கப் பூவை நீயே
புவிமீதில் மங்களம் சேர் ஊஞ்சல் ஆடாய்.

## 2. மங்களக் கல்யாணக்காட்சி

ராகம்:- கல்யாணசந்தம் தாளம்:- ஆதி

பல்லவி

மங்களக் கல்யாணக் காட்சி - சிவகாமி
மங்கள நாண் சோமசுந்தரர் சூட்டிடும்
(மங்கள)

அநுபல்லவி

அங்கயற் கண்ணியவள் செங்கரம் பற்றிச் சிவன்
அங்கவள் கண்கள் கவ்வும் அழகுத் தெய்வீகக் காட்சி
(மங்கள)

சரணம்

நான்முகன் மங்கள நான்மறை ஓதிட
நாரணன் தங்கையின் நற்கரம் சேர்த்திட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மான்மழு வேந்தும் நடராஜன் மகிழந்திட
மங்கை சுந்தரி முகம் நாணிச் சிவந்திட
(மங்கள)

அஞ்சன விழியிரண்டும் அரன்திரி நயனம்கௌவ
அஞ்சலென் றருள்வான் கண்கள் அணங்கவள்
விழியைக் கௌவ
செஞ்சிமிழ் வாயில் பூத்த சிரிப்பினுக்கிணையும் தந்தாள்
மஞ்சமதில் கல்யாண வசந்த மண்டபத்திலே
(மங்கள)

## 3. கல்யாண வசந்த மண்டபம்

ராகம்:- கல்யாண வசந்தம் தாளம்:- ஆதி

பல்லவி

கல்யாண வஸந்த மண்டபத்தில் - எந்தன்
கால்தூக்கிக் கண்ணன் அம்மிக் கல்லில் வைத்தானடி
(கல்யாண)

அநுபல்லவி

எல்லாம் மறந்தேனடி ஏகனோடிணைந்தேனடி
நல்லாயன் வெங்கடேசன் நாயகனானானடி
(கல்யாண)

சரணம்

ஓமப்புகை தனிலே ஓரக்கண்ணால் பார்த்தே
கோமளப் புன்னகையால் குழைத்தானடி நெஞ்சம்
சியாமள வண்ணன் கண்ணன் சௌந்தர்ய லாவண்யன்
பூவளர் பொன்னாலைப்பதி புனித வரதராஜன்.
(கல்யாண)

* * * * * *





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரபு வழிவந்த சில தமிழ்ப் பாடல்கள்

### 1. மாலைமாற்றினாள் - சோபனப்பாடல்

மாலை சாற்றினாள் - கோதை
மாலை மாற்றினாள்

(மாலை)

மாலடைந்து மகிழரங்கன்
மாலை அவர் தம் மார்பிலே
மையலாள் - தையலாள்
மாமலர்க் கரத்தினால் - பூ

(மாலை)

ரங்கராஜனை - அன்பர் - தங்கள் நேசனை
ஆசிகூறிப் பூசுரர்கள்
பேசி மிக்க வாழ்த்திட
அன்புடன் - இன்பமாய்
ஆண்டாள் கரத்தினால் - பூ

(மாலை)

* * * * *

### 2. கன்னூஞ்சல்

ராகம்:- ஆனந்தபைரவி தாளம்:- ஆதி

பல்லவி

கன்னூஞ்சல் ஆடிருந்தாள் - காஞ்சனமாலை
மனமகிழ்ந்தாள். (கன்னூஞ்சல்)

சரணங்கள்

பொன்னூஞ்சலில் பூரித்து
பூஷணங்கள் தரித்து
ஈஸ்வர னாரிடத்தில்
ஆசைகள் ரொம்ப வைத்து (கன்னூஞ்சல்)

உத்தமி பெற்ற குமாரி
நித்யஸர் வாலங்காரி
பக்தர்கள் பாபஸம் ஹாரி
பத்மமுக ஒய்யாரி (கன்னூஞ்சல்)

அசைந்து சங்கிலி ஆட
உசந்து ஊர்வசி பாட
இசைந்து தாளங்கள் போட
மீனாட்சிப் ப்ரியாள் கொண்டாட (கன்னூஞ்சல்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 3. ஆடினாள் ஊஞ்சல்

ராகம்:- உறிந்துஸ்தான் பெஹாக் தாளம்:- சாபு

பல்லவி

ஆடினார் ஊஞ்சல் சர்வேசர்
பாடினார் நாரதர் வீணை விலாசர்
(ஆடினார்)

சரணங்கள்

கோடி பாஸ்கர ப்ராகாசர்
கொண்டாடுவர் உள்ளே - நின்றாடும் நேசர்
(ஆடினார்)

பூர்வத்தில் காஞ்சனமாலை -
பூர்ண தபஸுகள் - செய்ததனாலே
(ஆடினார்)

ராஜகுமாரனைப் போல
ரத்னமிழைத்த - பொற் பீடத்தின் மேலே
(ஆடினார்)

கல்யாணக் கோலங்கள் கொண்டு
கடைக்கண்ணால் அடிக்கடி - தேவியைக் கண்டு
(ஆடினார்)

மந்தஹா ஸமாய்ச்சிரித்து
மதுரை மீனாட்சிப் ப்ரியாளை நினைத்து
(ஆடினார்)

* * * * *

## 4. ரத்ன ஊஞ்சல்

ராகம்:- சங்கராபரணம் தாளம்:- ஆதி

பல்லவி

ரத்ன ஊஞ்சலில் ஆடினாள்
பத்மா சுதனைப் பாடினார்.

(ரத்ன)

சரணங்கள்

1) முத்துச் சரங்கள் அசைந்திட
ரத்ன மாலை குலுங்கிட
சுற்றிலும் சகிகள் விளங்கிட
மெத்தவும் மதுராம்பிகே

(ரத்ன)

நல்லூர் ... நூலக
... மன்றம்
யாழ்ப்பாணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2) மதிமுகம் மந்தகாசமாய்
மன்ன னிடத்தில் நேசமாய்
வதன சுகப் ப்ரகாசமாய்
பரதேவதை உல்லாசமாய்

(ரத்ன)

* * * * *

## 5. சங்கரி ஊஞ்சல் ஆடினாள்

ராகம்:- ஆனந்தபைரவி தாளம்:- ரூபகம்

பல்லவி

சங்கரி ஊஞ்சல் ஆடினாள்
சரஸ்வதி சபையில் பாடினாள்
சகல தேவரும் கூடினார் - அங்கே
சொர்ணத்தாலே முடி சூட்டினார் - சிவ

(சங்கரி)

சரணங்கள்

1) இந்திராணி யம்மன் பாதத்தைத் தொட்டு
இஷ்டமாய்ப் பசும் பாலிட்டாள்
கங்கை நீர் கொண்டு பாதத்தில் விட்டு
பட்டுத் துணி கொண்டு துடைத்தாள். - சிவ

(சங்கரி)

2) பச்சைப் பிடிகள் சுற்றினாள் - நல்ல
ராஜ தீபங்கள் ஏற்றினாள்
பொன்னூஞ்சலைச் சுற்றினாள் - அன்னை
பூர்ண ஈஸ்வரி வாழ்த்தினாள் - சிவ

(சங்கரி)

* * * * *

## 6. நலுங்கிட வாருமையா

நலுங்கிட வாருமையா
நாணய முள்ள துரையே
நாலுவித வாத்யங்களும்
நாகரிக மாய் ஒலிக்க

(நலுங்கிட)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முத்திழைத்த பந்தலிலே
ரத்ன கோப்பு மாட்டிருக்கு
வந்த ஜனம் பார்த்திருக்க
வாருமையா நலுங்கிடவே.

(நலுங்கிட)

எந்த ஊரு எந்தத் தேசம்
எங்கிருந்து இங்கு வந்தீர்
மோகன புரம் தனிலே
மோகினியைக் காணவந்தேன்

(நலுங்கிட)

7. நலுங்கிட வாராய்

ராகம்:- மத்யமாவதி தாளம்:- ஆதி

123858

வாராய் ருக்மணி தேவி
நேராய் என்முகத்தைப்
பாராய், நலுங்கிடப் பாதத்தைத்
தாராய் மகிழ்வாக (வாராய்)

வலக்கரத்திலாழி தரித்திருக்கும் வாஸுதேவன்
திலகப் பொட்டிடுகிறேன் திருநெற்றியில் நேராய்
(வாராய்)

உத்தம பீஷ்மன் பெற்ற ரத்நமான பெண்ணே
நித்யாநந்த ஸாரங்கேசன் சித்தமகிழ் கண்ணே
(வாராய்)

8. நலுங்கிடுகிறாள்

ராகம்:- நாதநாமக்கிரியை தாளம்:- ஆதி

பல்லவி

நலுங்கிடு கிறாள் மீநலோசனி
நாதருடன் கூடி

(நலங்)

நாரதரும் நல்ல காநங்களைப் பாட
நானாவித தாளங்கள் போட

(நலங்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரணங்கள்

நீலவர்ண திவ்ய மஞ்சளை எடுத்து
நித்யாநந்தரைக் குறித்து
பூரித்துப் பூபதி பாதத்தி லேயிட்டாள்
புஷ்பஹாரம் மார்பில் போட்டாள்

(நலங்)

ஸவர்ண பன்னீர்ச் செம்பை - ஜோதியாய் எடுத்தாள்
ஸுந்தரேசர் மேலே தெளித்தாள்
வாசனை கந்த பரிமளம் பூசினாள்
வணங்கிச் சாமரம் வீசினாள்.

(நலங்)

* * * * *





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சத்குரு ஸ்ரீதியாகராஜ சுவாமிகளின் உற்சவ சம்பிரதாயக் கீர்த்தனைகள் சில

1. **சீதா கல்யாணம்**

ராகம்:- சங்கராபரணம்          தாளம்:- கண்டலகு

சீதா கல்யாண வைபோகமே
ராம கல்யாண வைபோகமே
(சீதா)

1) பவனஜ ஸ்துதி பாத்ர பாவன சரித்ர
ரவிசோம வரநேத்ர ரமணீய காத்ர
(சீதா)

2) பக்தஜன பரிபால பரிதசர ஜால
புத்தி முக்தித லீல பூதேவ பால
(சீதா)

3) பாமரா சுரபீம பரிபூர்ண காம
ஸ்யாம ஜகதபிராம ஸாகேத தாம
(சீதா)

4) ஸர்வ லோகாதார ஸமரைகவீர
கர்வ மானஸ தூர கனகாசுதீர
(சீதா)

5) நிகமாகம விஹார நிருபமசரீர
நகதராக விதார நதலோகாதார
(சீதா)

6) பரமேச நுதகீத பவஜலதிபோத
தரணிகுல ஸஞ்ஜாத த்யாகராஜநுத
(சீதா)

(சீதா ராம கல்யாணத்தின் வைபவமே வைபம். அநுமானால் துதிக்கப் பெறுபவன்; புனித சரித்திரமுடையவன்; சூரிய சந்திரரைக் கண்களாகக் கொண்ட கட்டழகன், பக்தரைக் காப்பவன், நிறைந்த அம்புகள் உடையவன்; போக மோட்சங்களை வழங்குபவன்; அந்தணரைக் காப்போன்; அரக்கருக்கு அச்சமூட்டுபவன் விருப்பங்கள் நிறைவேறியவன். நீலவண்ணன், உலகுக்கு ஆனந்தம் அளிப்போன், சகல உலகிற்கும் ஆதாரன், வீரன், கர்வமுள்ளோருக்கு எட்டாதவன், மேரு மலை போன்றவன், வேதாகமங்களில் உள்ளவன், மலைகளை ஏந்தியவன், பாபங்கள் போக்குபவன், சூரிய வம்சத்தில் பிறந்தவன், சம்சாரக்கடலின் ஓடம் ஆனவன்.)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. நாபாலி ஸ்ரீராம

ராகம்:- சங்கராபரணம் தாளம்:- ஆதி

நாபாலி ஸ்ரீராம
பூபாலக ஸ்தோம
காபாட ஸமயமுநீ பாதமுலீரா

(நாபாலி)

பளிபளி பக்துல பூஜாபலமு நீவது கொண்டி
நளிநலோசந நீகு நலுகு பெட்டேரா

(நாபாலி)

கோடி மந்துமதுலைந ஸாடிகா நீ ஸொகஸு
நாடியுந்நதி மதிநி மேடி ஸ்ரீராம

(நாபாலி)

தொலி பூஜா பலமேமோ கலிகெ நீபதஸேவ
நலுவகை நநு நிந்துதெலியக தரமா

(நாபாலி)

பதிதபாவந நீவு பாலிஞ்ச குண்டேது
கதி மாகெவரு மம்மு க்ரக்குந ப்ரோவு

(நாபாலி)

கோரி நீ பதஸேவஸாரெகு ஸேயநு தலசி
மாரமண நாலோநே மருலு கொந்நாநு

(நாபாலி)

நிருபேத கப்பிந நிதிரீதி தொரிகிதிவி
வரத்யாக ராஜுநிகி வரத ம்ரொக் கேரா

(நாபாலி)

(அரசகுலத்தோர் சூழ்ந்த ஸ்ரீராமனே, என்னைக் காத்தருள்க. தாமரைக்கண்ணனே, பக்தரின் பூசைகளின் பயன் நீயே, உனக்கு நலுங் கிட்டேன். உன் அழகு என் மனத்தில் நிலை பெற்றது. நான்முகனாலும் அறியப்படாத உனது பாதத்தில் சேவை செய்யப் பூர்வ ஜன்ம புண்ணியம் கிட்டியது. விரைவில் காப்பாயாக. வேறு யார் கதி. பரம ஏழைக்குச் செல்வம் கிடைப்பது போல நீ கிடைத்தாய். உன்னை வணங்குகிறேன்.)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. நகுமோ மு.

ராகம்:- மத்யமாவதி

தாளம்:- ஆதி

பல்லவி

நகுமோ மு கலவா நி நாம நோஹருதி
ஜகமேலு குரு நி ஜாந கி வருநி

(நகுமோ)

சரணங்கள்

தேவாதி தேவு நி திவ்ய ஸுந்தருநி
ஸ்ரீவாஸு தேவுநி ஸீதா ராகவு நி

(நகுமோ)

ஸுஜ்ஞான நிதிநி ஸோம ஸுர்ய லோசநுநி
அஜ்ஞான தமமுது அணசு பாஸ்கருநி

(நகுமோ)

நிர்மலா கருநி நிகிலாக உறருநி
தர்மாதி மோக்ஷம்நு தயசேயு கநுநி

(நகுமோ)

போததோ பலுமாறு பூஜிஞ்சி நேநா
ராதிந்து ஸ்ரீத்யாக ராஜஸந் நுதுநி

(நகுமோ)

(நகை தவழும் முகத்தோன்; என்னுளம் கவர்ந்தோன்; உலகாளும் சூரன்; ஜானகி மணாளன்; தேவாதிதேவன்; திவ்ய அழகன்; வசுதேவன் மைந்தன்; சீதா ராமன்; சந்திர சூரியரைக் கண்ணாயுடையவன்; நல்ல ஞானநிதி; அஞ்ஞான இருளகற்றும் சூரியன்; நிர்மலவடிவுடையோன்; பாபங்கள் போக்குவோன்; புருஷார்த்தங்களை அருள்வோன்; ஆகிய இராமனைப் பல் முறை பூசித்து வணங்குகிறேன்.)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. உய்யாலு.....

ராகம்:- நீலாம்பரி தாளம்:- ஜம்ப

பல்லவி

உய்யால லூக வைய ஸ்ரீராம

(உய்யால)

அநுபல்லவி

ஸய்யாட பாடலநு ஸத்ஸார்வபௌம

(உய்யால)

சரணம்

கமலஜாத் யகிலஸுரலு நிநு கொல்வ
விமலுலைந முநீந்த்ருலுத் யாநிம்ப
கமநீய பாகவதுலு குணகீர்த்த
நமுந நாலாபம்புலு ஸேயக

(உய்யால)

நாரதாதுலு மெறயுசு நுதியிம்ப
ஸாரமுல பாகவிநுசு நிநுநம்மு
வாரல ஸதா ப்ரோசுசு வேத
ஸாரஸப லநு ஜுசுசு ஸ்ரீராம

(உய்யால)

நவமோஹநாங்கு லைந ஸுரஸதுலு
விவரமுக பாடக நா பாக்யமா
நவரத்ந மண்டபமுந த்யாகரா
ஜவிநுதாக்ருதி பூநிக ஸ்ரீராம

(உய்யால)

(வினோதமான ஆடல் பாடல்களுடன் ஊஞ்சலாடுக. ராம, ஸார்வபௌம, எல்லாத் தேவர் முனிவரும் உன்னைத் தியானித்து வணங்க, பக்தர்கள் பாடிப்பரவ, நாரதர் முதலியோர் வணங்க, உன்னை நம்புவோரைக்காத்து ஞானசபைகளைக்காத்து நவரத்ன மண்டபத்திலே எழுந்தருளி ஊஞ்லாடுக.)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 5. க்ஷீர ஸாகர.....

ராகம்:- ஆனந்தபைரவி  தாளம்:- ஜம்ப

பல்லவி

க்ஷீர ஸாகர விஹார அபரிமித
கோர பாதக விதார
க்ரூர ஜநகண விதூர நிகமஸஞ்
சார ஸுந்தர சரீர

(க்ஷீர)

சரணம்

சதமகா உறிதவிபங்க ஸ்ரீராம
சமநரிபு ஸந்நுதாங்க
ஸ்ரிதமா நவாந்தரங்க ஜநகஜா
ஸ்ருங்கார ஜலஜ ப்ருங்க

(க்ஷீர)

ராஜாதி ராஜவேஷ ஸ்ரீராம
ரமணீய கர ஸுபூஷ
ராஜநுத லலிதபாஷ ஸ்ரீத்யாக
ராஜாதி பக்த போஷ

(க்ஷீர)

(பாற்கடலில் விளையாடுபவனே, எல்லையற்ற கொடும்பாபத்தைப் போக்குபவனே, கெட்டவரைத் தொலைவில் வைப்பவனே, வேதங்களில் சஞ்சரிப்பவனே, அழகனே, இந்திரனின் எதிரிகளை அழிப்பவனே, அடைக்கலமானவருக்கு அந்தரங்கமானவனே, ஜானகி என்ற தாமரையை வட்டமிட்டும் வண்டு போன்றவனே, மன்னர் மன்னனே, அணிகலன்கள் பூண்டவனே, அரசரால் வணங்கப்படுபவனே, இன்சொல்லுடையவனே.)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 6. மங்களம்

ராகம்:- ஸௌராஷ்டிரம் தாளம்:- ஆதி

நீ நாம ரூபமுலகு நித்ய ஜெய மங்களம்
(நீநாம)

பவமாந ஸுதுடுபட்டு பாதார விந்த முலகு
(நீநாம)

ராஜீவ நயந த்யாக ராஜாதி விநுதமைந
(நீநாம)

(உனது திருநாமத்துக்கும் திருவுருவுக்கும் என்றும் ஜய மங்களம். வாயுவின் மைந்தனான அனுமான் தாங்கும் திருவடித் தாமரைகளுக்கும் தாமரைக்கண்ணனே, தியாகராஜன்துதிக்கும் உனக்கு நித்ய மங்களம்.)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லூர் இளை நூலகம்
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்.

உசாத்துணை நூல்கள்

1. நாற்பது சம்ஸ்காரங்கள்

ஸ்ரீவத்ஸ. வே. ஸோமதேவ சர்மா.

வைதிக தர்ம வர்த்தினீ வெளியீடு - 2 ம்பதிப்பு 1968.

2. விவாஹ மந்த்ரார்த்தங்கள்

சி. பாலசுப்ரஹ்மணய ஐயர் (பி.ஏ.பி.எல்)

உறிந்துமத கலாசார நூல்வெளியீட்டுச் சங்கம்.

திருத்திய பதிப்பு - 1978.

3. கல்யாணமே வைபோகமே

நஜன் - பிரதிபாபிரசுரம் - 2 ம் பதிப்பு - 1987.

4. கௌரீ கல்யாணம் வைபோகமே

ஸ்ரீமதி ஸரஸ்வதி பட்டாபிராமன்

லிப்கோவெளியீடு - 2 ம் பதிப்பு - 1986.

5. தெய்வத்தின் குரல்

காஞ்சி காமகோடி பீடம் சுவாமிகளின் அருள்வாக்குகள் பாகம் - 2 தொகுப்பாளர் ரா. கணபதி.

வானதி பதிப்பக வெளியீடு - 6 ம் பதிப்பு - 1992.

6. ஸ்ரீதியாகராஜ ஸ்வாமி கீர்த்தனைகள் - 3 ம் பதிப்பு - 1976.

மொழி பெயர்ப்பாளர் - டி.எஸ். பார்த்தசாரதி.

உறிக்கின்பாதம்ஸ் வெளியீடு.

123008

249963

நேர்முக உரையாடல்கள்

1. பிரம்மஸ்ரீ ச.சோமாஸ்கந்தக்குருக்கர் - மயிலணி.
2. பிரம்மஸ்ரீ சுப்பிரமணியக்குருக்கர் - அரியாலை.
3. பிரம்மஸ்ரீ தி. நடனசபாபதிசர்மா - நீர்வேலி
4. ஸ்ரீமதி பார்வதி குமாரசாமிசர்மா - யாழ்ப்பாணம்.

* * * * *



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

24996 NB

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Printed By: Kaarthigeyan Printers (Pvt) Ltd. - 595875
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org